

தமிழ்நாடு ஆவணக் காப்பக நூலகம்
188728

# பால விநோதினி

(மாதப் பத்திரிகை)

9 - DEC 1932

"உலகத்தோடு ஒட்ட ஒழுகல் பலகற்றும்
கல்லார் அறிவிலா தார்"
"எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்
மெய்ப் பொருள் காண்பது அறிவு"


| தொகுதி III | 1932௵ நவம்பர்௴<br>ஆங்கீரஸ௵ கார்த்திகை௴ | பகுதி XI |
|---|---|---|


## ஹாஸ்ய விநோதங்கள்.

(BY C. V. PICHAI).

சந்தானம்:—மிஸ்டர் கௌன்ஸிலர்வாள்! இந்த படேல் பில்டிங்கில் தங்களைக் கண்டு வெகு நாளாயிற்று. கலைந்து மீட்டிங்காக தங்களைக் காணமுடியவில்லை. என்ன காரணமோ?

கௌன்ஸிலர்:—நான் மீட்டிங்குக்கு வந்தால் என் வார்டைப்பற்றியவரையில் ஏதாவது நன்மையைச் செய்யவேண்டியிருக்கும். அந்த நன்மை சென்ற எலெக்ஷனில் அதே வார்டில் எனக்கு விரோதமாய் எதிர் கக்ஷிக்கு உதவிசெய்தவந்தவர்களுக்குமல்லவோ நன்மையை உண்டாக்கும். அதனால்தான் நான் முனிஸிபல் மீடிங்குகளுக்கே அடிக்கடி போவதில்லை

*  *  *  *  *

சீமாச்சு:—மிஸ்டர் கிருஷ்ணய்யங்கார்! உமக்கென்ன ராஜா. மாதம் உட்கார்ந்தயிடத்தில ஐம்பது ரூபாய் சம்பளம். அது போகட்டும்; நாலணா எடும். காப்பி சாப்பிடவேண்டும்.

ஜெயராமன்:—என் ஸார்! அப்படியாயினும் அவரிடம் கடன் வாங்கி என்ன காப்பி...?

சீமாச்சு:—அப்படியல்ல ஸார்! இரண்டுவிதமுமுண்டு. அவர் கொடுத்து நான் சாப்பிடுவதுமுண்டு. நான் சாப்பிட்ட பிறகு அவர் கொடுப்பதுமுண்டு. எங்களுக்குள் எல்லாம் ஸ்நேக பாவத்து. வித்யாஸமில்லை.

*  *  *

1933 புது பதிப்பு. 1933

# "ஸ்ரீவித்யா"

ஜெம், ஜெண்ட்ஸ், பாக்கெட்,
பிஸினஸ், பாபுலர் அண்டு
அபீஷியல்

# டைரிகள்

இந்த டைரிகள் உயர்ந்த வெண்மையான பேபரில் பிரிண்டுசெய்து, மிகவும் நேர்த்தியான காலிகோவில் பைண்டு செய்யப்பட்டிருக்கின்றன.

*ஒருதரம் உபயோகித்தால் நன்கு விளங்கும்.*

தென் இந்தியா முழுவதும் எல்லோராலும் நன்கு மதிக்கப்பெற்றது.

தேவைக்கு தாமதமன்னியில் ஆர்டர் செய்யவும்.

பப்ளிஷர்ஸ் :—ஸ்ரீ வித்யா பிரஸ்,
கும்பகோணம், (தென் இந்தியா).

தந்தை :—டாக்டர்வாள்! பையனுக்கு உடம்பு எப்படியிருக்கிறது? இந்த ஜுரத்திற்குப் பெயர் என்ன? இன்னும் எவ்வளவு நாள் இப்படியிருக்கும்? என்ன ஆகாரம் கொடுக்கலாம்?

டாக்டர் :—இந்த ஜுரமா? பத்துநாள்வரையில் இப்படித்தானிருக்கும். இதற்குப் பரீக்ஷை ஜுரமென்று பெயர். ஆகாரம் வழக்கம்போல் கொடுக்கலாம்.

பையன் :—அப்பா! நாளைக்கே சொஸ்தமாய்விடும் கவலைப்படாதே. இன்று காலையில் கணக்குப் பரீக்ஷை. மத்தியானம் இங்கிலீஷ் பரீக்ஷை. நாளைக்கு டிராயிங்.

* * * * *

உபாத்தியாயர் :—டேய் அப்பு! ஆறும் நாலும்...?

அப்பு :—பத்து.

உபா :—சபாஷ்! நீ உட்கார். அடுத்த பையன்! பத்தில் எவ்வளவு கழித்தால் ஒன்பதாகும்?

பையன் :—ஒன்றைக் கழித்தால்.

உபா :—பேஷ்! எல்லோருக்கும் நன்றாய்ப் புரிகிறதா? போர்டைப் பாருங்கள். (எழுதி) இதோ ஒன்பதிருக்கிறது. எப்படி எடுத்தால் ஆறாகும்?

தம்பு :—(கையை உதறிக்கொண்டு) சார்! சார்! நான் நான் சொல்லுகிறேன். அந்த போர்டைத் தலைகீழாய் எடுத்தால் ஆறாகிவிடும்.

* * * * *

தேசிகாசாரியார் :—இலையில் சாத்தைப் போட்டுவிட்டு எங்கேயோ போய்விட்டான். மட்டிக் கழுதை. கோமளி! கோமளி!!

கோமளி :—(கோபத்துடன்) என் அப்பா! எப்பப்பார்த்தாலும் அவசரம்தான்.

தேசி :—எண்டி! இலையில் பாதி பரிமாறிவிட்டு எங்கே போனாய்? யார் அங்கே? போக்கிரி நாகராஜனா?

கோமளி :—ஆமாம்; உங்களுக்கு எல்லோரும் போக்கிரிதான்.

பேபி (குழந்தை) :—அப்பா! நான் உன்னோடு பேசமாட்டேன் போ. என் ஈகாச மாமாவை போக்கிரினு வெசெ...ம்.. அந்த மாமா தான் நல்ல மாமா. நாளைக்கி நீ ஊருக்குப் போனே பாரு. அப்பொ எனக்கு கை நிறைய பிச்சுகோத்து கொண்டுவந்து கொடுத்தார். அக்காவுக்குத்தான் ஒன்றும் கொடுக்கவில்லை. ஒரே ஒரு முத்தம்தான்.

* * * * *



குறித்துக்கொண்டு அவசரத்துடன் சென்று நீலகண்டனைசந்தித்து எல்லாவற்றையும் அவனிடம் விபரமாய்க் கூறினான்.

## அத்தியாயம் 9.

அதேதினம் இரவு சுமார் 8 மணி இருக்கும்.

நம் கதை நடக்குமிடமாகிய சுந்தரபுரிக்கு வடக்கே சுமார் 2 மைல் தூரத்தில் பெரிய மரங்களடர்ந்த ஒரு விசாலமான தோப்பின் மத்தியில் முனீசுவரன் கோயில் ஒன்று உண்டு. அஸ்தமித்ததும் அப்பக்கம் ஒருவரும் மனந்துணிந்து செல்லமாட்டார்களென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. ஆனாலும் அச்சமயம் அத் தோப்பின் ஒரு பாகத்தில் ஒருவன் மேலும் கீழும் உலாவிக்கொண்டிருந்தானகையால் பயங்கரமான அந்தகாரம் சூழ்ந்த அவ்விடத்தில் அந்நேரத்தில் அவன் என்னசெய்துகொண்டிருந்தானென்பதை நாம் கவனிக்கவேண்டியது அவசியம். அவன் பலதரம் வாயைவிட்டு "நான் மேலும் தாமதிப்பது பிசகு. இந்த இடத்தைப் பார்த்தால் என் உடல் நடுங்குகிறது." என்று கூறியவண்ணம் அப்படியே நின்று உற்றுக்கேட்பதும் பிறகு "இருக்கட்டும்; இன்னும் 5 நிமிஷநேரம் பார்ப்போம்." என்று தீர்மானித்து மறுபடியும் உலாவவாரம்பிப்பதுமாயிருந்தான். கடைசியில் சமீபத்தில் ஒரு மனித உருவம் தன்னை நோக்கி வருவதைக் கண்டதும், 'அப்பாடா!' என்று ஒருதரம் பெருமூச்செறிந்துவிட்டு, ஆவலுடன்,

"கேசவா! கேசவா!" என்று அழைக்கவே வந்தவன் அச் சப்தத்திலிருந்து தன்னை அழைப்பவன் இருக்கும் இடத்தை ஊகித்தறிந்து அவனை நோக்கி வந்தான். அவ்விடத்தில் நல்ல இருள் சூழ்ந்துகொண்டிருந்ததால் அவர்களுடைய வெளித் தோற்றத்தைச் சிறிதும் நாம் வர்ணிக்க வழியில்லாமலிருக்கிறது. நிற்க, கேசவனென்று அழைக்கப்பட்டவன், கோபத்துடன்,

"யாரடா நீ? என் பெயர் கேசவனென்று உனக்குச் சொன்னது யார்? என்று வினவ, மற்றொருவன்,

"நீ கேசவனில்லாவிட்டால், இந்நேரத்தில் இங்கு வந்ததற்குக் காரணமென்ன?" என்று கேட்கவே, கேசவன்,

"என்னை இங்கு வந்து தன்னை சந்திக்கும்படி எனக்கு ஒருவன் இன்று கடிதம் எழுதினான். அக்கடிதத்திலிருந்து அவன் பெரிய போக்கிரியென்றும் தன்னால் முடிந்தவரையில் பயந்தவர்களை மிரட்டிப் பணம் பறித்துப் பிழைக்கும் சண்டாளனென்றும் தெரிந்துகொண்டேன். ஆகவே, அவனைப் பிடித்து அவசியமிருந்தால் அவனைப் போலீஸாரிடம் ஒப்புவிக்கும்பொருட்டு வந்தேன். ஆனால் அக்கடிதம் எழுதியவன் நீதானோ?" என்று இறுமாப்புடன் வினவினான். மற்றொருவன், சிறிதும் அஞ்சாதவன்போல்,

"நீ என்னைப் போலீஸாரிடம் காட்டிக்கொடுக்க மனந்துணியமாட்டாயென்பது நிச்சயம். இன்னும் நான் உன்னை வீணில் மிரட்டும்பொருட்டு இங்கு வரச்சொல்லவில்லை. உனக்குக் கடிதம் எழுதியவன் நானே. உனக்கு என்னை நன்றாய்த் தெரியும். இல்லாவிட்டால் இன்று தற்செயலாய் நீ என்னைக் கடைத்தெருவில் கண்டதும், உன் முகம் வெளுத்து விகாரமடைவானேன்? உடனே நீ பிசாசைக் கண்டவன்போல் அவ்விடத்திலிருந்து ஓடுவானேன்? ஒருக்கால் நீ என்னுடைய பெயரை மறந்திருக்கலாம். என்னுடைய பெயர் ரங்கராஜு." என்று கூறவே, கேசவன்,

"என்ன? ரங்கராஜுவா? நான் இதுவரையில் இப்பெயரைக் கேட்டதுமில்லை. அடே! இப்பொழுதே சொல்லிவிடுகிறேன். நீ என்னை பயமுறுத்துவது முடியாத கார்யம். மடையா! உன்னைக் கண்டு என் முகம் வெளுப்பானேன்?" என்று பரிஹசித்தான். ஆனால் ரங்கராஜு,

"உன் முகம் வெளுத்தது வாஸ்தவம். இன்னும் அது அப்படி வெளுக்கக் காரணமுமுண்டு. என்ன காரணமென்னவென்பதைச் சொல்லுகிறேன் கேள். நீ கொஞ்ச



காலத்திற்குமுன் பம்பாயில் உத்தியோகம் செய்துகொண்டிருந்தாய். நீ மாடுங்காவில் (பம்பாயின் ஒருபாகம்) மெலேவியாசாலில் (ஒரு பெரிய வீட்டின் பெயர்) 72 நெ. அறையில் வசித்துவந்தாய். நான் 71ம் நெ. அறையில் இருந்தேன். ஒருநாள் இரவு நீ சுமார் 10 மணிக்கு மற்றொருவனுடன் வந்தாய். அப்படி உன்னுடன் வந்தவன் எல்லா விஷயங்களிலும் உன்னைப்போலவே இருந்தான். அச்சமயம் நான் நீங்களிருவரும் இரட்டைப்பிள்ளைகளாயிருக்க வேண்டுமென்று நினைத்தேன். உங்களிருவரையும் அன்று என்னைத் தவிர வேறு யாரும் கவனிக்கவில்லை. ஆகவே, மறுநாட்காலை உங்களில் ஒருவன் மாயமாய்ப் போய்விடவே எனக்குண்டான ஆச்சர்யத்திற்களவில்லை. பாக்கியிருந்த ஒருவனும் உன் அறையில் சவமாய்க் கிடந்தான். அவன் சமீபத்தில் உன்னால் எழுதப்பட்ட ஒரு கடிதத்தில் நீ, பலகாரணங்களால் மேலும் உயிருடனிருக்க இஷ்டமில்லாமல், தற்கொலை செய்துகொள்ளுவதாக எழுதியிருந்தது. சவமாய்க்கிடந்தவன் பார்ப்பதற்கு உன்னைப்போலவே இருந்ததாலும், இன்னும் உங்களிருவரையும் சேர்ந்து அவ்வீட்டில் ஒருவரும் கவனிக்கவில்லையாகையாலும், எல்லாம் போக அச்சமயம் நீ கண்டபடி பலரிடம் கடன் வாங்கியதின்பலனாய் மிகவும் அவமானப்படும்தருவாயிலிருந்ததாலும், நீயே தற்கொலை செய்துகொண்டுவிட்டாய் என்று எல்லோரும் நம்பிவிட்டனர். ஆனால் சவமாய்க்கிடந்தவன நீயல்லவென்றும், நீயே உன்னுடன் வந்த மற்றொருவனைக் கொலைசெய்துவிட்டு கம்பிநீட்டிவிட்டாயென்றும், எனக்கு மட்டும் தெரியும். எப்படியென்றால்—" என்று அவன் மேலேபேசுமுன், கேசவன், அவனைத் தடுத்து,

"அடே! நீ பைத்தியமென்று தோன்றுகிறது. பேஷ்! அபாரமான கதை கட்டியிருக்கிறாயே. ஏண்டா! இதை உன்னால் ரூபிக்கமுடியுமா?" என்று இகழ்ந்து பேசவே, ரங்கராஜு, உறுதியுடன்,

"கேசவா! நான் பைத்தியமல்ல. நான் இவ்வளவு தூரம் சொல்லியும் நீ என்னை ஏமாற்றப் பிரயத்தனப்படு

வதைக் காண நீதான் பைத்தியமென்று தோன்றுகிறது. அடே! இதை நான் ஒருநிமிஷத்தில் ரூபிக்கமுடியும்." என்று விடையளித்தான்.

இதைக் கேட்டதும், கேசவன் கொஞ்சநேரம் மௌனம் சாதித்தான். பிறகு,

"சரி; நீ சொல்லுவது வாஸ்தவமென்றே வைத்துக் கொள்ளுவோம். இப்பொழுது உனக்கு வேண்டியது என்ன?" என்று வினவ, ரங்கராஜு,

"கேசவா! உன் இரஹஸ்யத்தை வெளியிட்டு அனாவசியமாய் உன்னைக் கஷ்டத்திற்குள்ளாக்குவதில் எனக்கொன்றும் லாபமில்லை. தற்சமயம் எனக்கு உத்தியோகம் போய்விட்டது. இவ்வூர் நான் பிறந்து வளர்ந்த ஊராகையால் இங்கு ஏதேனும் வியாபாரம் செய்து பிழைக்கலாமென்று பார்க்கிறேன். ஆனால் அதற்கு முதல் வேண்டும். ஆகவே, நீ இப்பொழுது எனக்கு 5000 ரூ. பணம் கொடுத்து உதவி செய்வாயாகில் நான் உன்னை ஒருநாளும் மறக்கமாட்டேன். ஆனால் நான் உன் இரஹஸ்யத்தை அறிந்து அதைக்கொண்டு உன்னை மிரட்டிப் பணம் பறிப்பதாக நீ நினைக்கவேண்டாம். தெய்வானுக்கிரகத்தினால் எனக்கு என் வியாபாரத்தில் நல்ல லாபம் வருமாகில் உன் பணத்தை சீக்கிரம் திருப்பிக் கொடுத்துவிடுவேன்." என்றான்.

கேசவன் மறுபடியும் கொஞ்சநேரம் மௌனம் சாதித்தான். பிறகு,

"சரி. இப்பொழுது உனக்கு 5000 ரூ. பணம் கொடுக்க நான் தயார். ஆனால் நீ மறுபடியும் என்னைப் பயமுறுத்திப் பணம் பறிக்கப் பிரயத்தனப்படமாட்டாயென்பது என்ன நிச்சயம்? ஆகவே நீ ஒரு காரியம் செய்யவேண்டும். உனக்கு தெய்வபக்தி மிகவும் உண்டென்பதை நான் அறிவேன். நீ பம்பாயில் தினந்தோறும் பழனிஆண்டவனுக்குப் பூஜை செய்யாமலிருப்பதில்லை. ஆகையால், நீ அத் தெய்வத்தின்மேல் ஆணையாய், இந்த 5000 ரூபாயுடன் என்னை விட்டுவிடுவதாகவும், இனி என்னை இது சம்பந்த



மாகப் பார்ப்பதில்லை என்றும் சத்தியம் செய்துகொடுக்க வேண்டும்." என்றான். உடனே, ரங்கராஜு அவன் கேட்டபிரகாரம் சத்தியம் செய்துகொடுக்கவே, கேசவன்,

"சரி. நீ நாளை தினம் இரவு 8 மணிக்கு இதே இடத்தில் இரு. நான் பணத்துடன் வருகிறேன். நீ மேலும் என்னைத் தொந்தரவு செய்யமாட்டாயென்று நம்புகிறேன்." என்றான். ரங்கராஜு,

"அதைப்பற்றி நீ கவலைப்படவேண்டாம். சரி; நாளை இரவு 8 மணிக்கு நான் இங்கு வருகிறேன். ஆனால் நீ வீண் காலதாமதம் செய்யக்கூடாது. எனக்கு இவ்விடத்தில் இருட்டில் தனிமையில் நிற்க பயமாயிருக்கிறது." என்று பீதியுடன் கூறவே, கேசவன்,

"நான் கண்டிப்பாய் 8 மணிக்குள் வந்துவிடுகிறேன். ஆனால் ஒன்று; நீ நாளை வராவிட்டால் பிறகு என்னைப் பார்க்கமுடியாது. ஏனென்றால் நான் நாளை இரவு 12 மணி வண்டியில் சென்னை போகவேண்டும். சரி; நான் போகிறேன்." என்று கூறிவிட்டு மடமடவென்று போய்விட்டான். அத் தோப்பைக் கடந்து சென்றதும், கேசவன் மேலும் துரிதமாய் நடக்கவாரம்பித்தான். ஆனால் சற்று நேரத்திற்கெல்லாம் நல்ல வெளிச்சமுள்ள ஒரு வீதிக்குள் நுழைந்ததும் ஒருவரும் தன் முகத்தைப்பார்க்க வழியின்றி தன் மேல் அங்கவஸ்திரத்தால் அதை மறைத்துக்கொண்டு மெதுவாய் நடக்கவாரம்பித்தான். பிறகு, ஒரு பெரிய கட்டடத்தின் சமீபத்தில் நின்றுகொண்டிருந்த சில வண்டிகளை அணுகி, அவைகளில் ஒன்றில் ஏறிக்கொண்டு, அவ்வண்டிக்காரனிடம் ஒரு வீதியின் பெயரைக் கூறியதும், வண்டி உடனே வேகமாய்ப் புறப்பட்டது. மேலும் சுமார் 1 மணி நேரத்திற்கெல்லாம் வண்டி அவ்வூரில் அதிக ஜனப் புழக்கமில்லாத ஒரு இடத்திற்கு வந்துசேரவே, கேசவன் வண்டிக்காரனிடம் தான் அரைமணி நேரத்திற்குள் திரும்பி வருவதாகவும் அதுவரையில் வண்டியை சமீபத்திலேயே நிறுத்திவைக்கும்படியும் கூறிவிட்டு மேலே சென்றான்.

அங்கு காணப்பட்ட வீடுகளைப் பார்த்ததுமே அது மிகவும் ஏழைகளின் வாசஸ்தலமென்று தோன்றியது. எங்கும் குப்பையும் துர்நாற்றமுமே நிரம்பியிருந்தது. கேசவன் வெறுப்புடன் பலதரம் காரி உமிழ்ந்தவண்ணம் சென்றான். அச்சமயம் மணி 10க்குமேலிருக்குமாகையால், அவ்விடத்தில் சிறிதும் சந்தடியின்றி, மிகவும் இருள் சூழ்ந்து பயங்கரமாயிருந்தது. கேசவனைக் கண்டதும் சில நாய்கள் வெறியுடன் குலைத்துக்கொண்டே அவனை நோக்கி ஓடிவந்தன. கடைசியில் கேசவன் ஒரு சந்திற்குள் நுழைந்து அங்கு காணப்பட்ட வீடுகளைக் கொஞ்சநேரம் கவனித்தவண்ணமிருந்தான். அதிலிருந்த 5 வீடுகளில் 4 வீடுகள் இடிந்து பாழாய்க்கிடந்தன. பாக்கியிருந்த ஒரு வீடும் மிகவும் பரிதாபகரமான நிலைமையிலிருந்தது. அதிலிருந்து சிலர் குடித்துவிட்டு, உலகத்தையே மறந்து, குதூகலத்துடன் பாடும் சப்தம் வெளிவந்தது. கேசவன் மேலே நடக்கப் பயந்தவன்போல் கொஞ்சநேரம் தயங்கினான். பிறகு அவ்வீட்டை அணுகி, இரண்டுமூன்றுதரம் ‘முனியா! முனியா!’ என்று அழைக்கவே, பாட்டின் சப்தம் நின்றது. மறுநிமிஷம், ஒருவன் வெளியே தோன்றி, கேசவனை நோக்கி என்ன வேண்டுமென்று விசாரிக்கவே, கேசவன், அவனுடைய குரலிலிருந்து, அவனே முனியனென்பதைத் தெரிந்துகொண்டு,

“முனியா! எனக்கு உடனே உன்னுடன் கொஞ்சம் பேசவேண்டும்.” என்றான்.

கேசவனுடைய குரலிலிருந்து முனியனும், அவன் யாரென்பதைத் தெரிந்துகொண்டவன்போல், மிகவும் மரியாதையுடன்,

“அடாடா! நீங்களா? இதோ வந்துவிட்டேன்.” என்று கூறிவிட்டு மறுபடியும் உள்ளே சென்றான்.

முனியனுடைய வெளித்தோற்றத்தைப் பார்த்ததுமே எப்பேர்ப்பட்டவனும் நடுங்குவானென்பது திண்ணம். அவன், சற்று நேரத்திற்கெல்லாம் மறுபடியும்



வெளியே வந்து, கேசவனைக் கொஞ்சதூரம் அழைத்துச்சென்று,

“சரி. விஷயத்தைச் சொல்லுங்கள்.” என்றான். கேசவன், ஒருதரம் நாலாபக்கங்களையும் கவனித்துவிட்டு,

“நாம் பேசுவதை இங்கு ஒருவரும் உற்றுக் கேட்கமாட்டார்களே?” என்று வினவ, முனியன்,

“அதைப்பற்றி நீங்கள் கவலைப்படவேண்டாம்.” என்று விடையளித்தான். உடனே கேசவன், தாழ்ந்த குரலில்,

“நாளை இரவு நீ ஒருவனை யமலோகம் அனுப்பவேண்டும்.” என்றான்.

## அத்தியாயம் 10.

அதே தினம் இரவு சுமார் 8மணி இருக்கும்.

அச்சமயம் வக்கீல் நாகராஜய்யருடைய வீட்டில் அநேகமாய் எல்லோரும் படுத்துக்கொண்டுவிட்டனர். ஆனால் நம் கிட்டு தன் வழக்கம்போல் பாலகிருஷ்ண செட்டியார் வீட்டுப் பரிசாரகன் கிருஷ்ணனுடன் ரங்காடும் பொருட்டு வெளியேசெல்லத் தயாராய் நின்றுகொண்டிருந்தான். அவன், அன்றுகாலை தன் நண்பன் தம்புசாமியுடன் பேசியதின் பலனாய், கிருஷ்ணன் அதுவரையில் ரங்காட்டத்தில் செய்துவந்த சூதைக் கண்டுபிடிக்கத் தீர்மானித்திருந்தானென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை.

நிற்க, பாலகிருஷ்ணசெட்டியாருடைய வீடும் கிட்டத்தட்ட நாகராஜய்யருடைய வீடுபோலவே இருந்தது. அவ்விரு வீடுகளுக்குமிடையில் சுமார் ஒரு பர்லாங்குதூரம் அவ்வீடுகளின் தோட்டங்களிருந்தன. தற்சமயம் செட்டியாருக்கு 10 லக்ஷத்துக்குமேல் ஐவேஜியுண்டு. ஆனால் அவர், தன்னிடமிருந்த சொத்தை தான் இறப்பதற்குமுன் அழித்துவிடத் தீர்மானித்தவர்போல், அதைக் கண்டபடி

செலவழித்துக்கொண்டிருந்தார். நாம் சொல்லும் சமயம் அவருக்கு சுமார் 30 வயதிருக்கும். அதுவரையில் எக்காரணத்தாலோ அவர் விவாஹம் செய்துகொள்ளவில்லை. ஆனால் அவ்வூரிலுள்ள தாஸிமார்கள் ஒவ்வொருவரும் அவராலேயே பிழைத்துவந்தனரென்று சொல்லலாம். ஆகவே, அவர் இராக்காலங்களில் தன் வீட்டிலிருப்பதில்லையென்பதை நாம் சொல்லவேண்டியது அனாவசியம். அதுவுமன்றி அவ் வீட்டு சமையற்கட்டு தனிமையிலிருந்தது. பரிசாரகனாகிய கிருஷ்ணனைத் தவிர அவ் வீட்டில் இரு வேலைக்காரர்கள் உண்டு. அதில் ஒருவன் அவ் வீட்டின் முன்கட்டிலும் மற்றொருவன் தோட்டத்திலும் படுத்துக்கொள்ளுவது வழக்கம். தினந்தோறும் பாலகிருஷ்ணசெட்டியார் இரவு 9மணிக்குள் தன் சாப்பாட்டை முடித்துக்கொண்டு வெளியே சென்றதும், அவ் வீட்டிற்கு நம் பரிசாரகன் கிருஷ்ணனே யஜமானனென்று சொல்லலாம். இன்னும் கிருஷ்ணனுடைய அறைக்கு வரும் ஒருவன் அவ் வீட்டின் முன்கட்டின் வழியாய் வரவேண்டியது அவசியமில்லை. ஆகவே, அவ்விதம் கிருஷ்ணனும் வக்கீல் நாகராஜய்யருடைய தமயன் பிள்ளை கிட்டுவும் ரங்காடுவதை நாம் சொன்ன அவ்விரு வேலைக்காரர்களும் கவனிக்க நியாயமில்லாமலிருந்தது. இன்னும் கிட்டு அவ்விதம் அங்கு வந்து ரங்காடுவதை நாகராஜய்யருடைய வீட்டில் அவனுடைய மனைவி பார்வதியைத் தவிர வேறு எவரும் அறிய வழியில்லை. ஏனெனில் கிட்டுவின் படுக்கை அறை அவ் வீட்டின் கீழ்பாகத்திலிருந்ததுமன்றி, அவ் அறைக்குள் நுழைய இருவழிகளுண்டு. அதில் ஒன்றின்வழியாய் பிறர் கவனிக்காவண்ணம் அவ் வீட்டின் தோட்டத்திற்கு வந்துசேரலாம். ஆகவே, தினந்தோறும் கிட்டு, அவ் வழியாய் வெளியே வந்து, தோட்டத்தைக் கடந்து சென்று, தன் வீட்டிற்கும் பாலகிருஷ்ண செட்டியாருடைய வீட்டிற்குமிடையிலிருந்த 4 அடி உயரமுள்ள ஒரு சுவரை எறிக்குதித்து, கிருஷ்ணனுடைய அறைக்குப் போவதுவழக்கம்.

இனி நம் கதையைக் கவனிப்போம்.



அன்று வழக்கப்படி கிட்டு, பரிசாரகன் கிருஷ்ணனுடைய அறைக்குச் சென்றபொழுது, கிருஷ்ணன், சிந்தையில் ஆழ்ந்தவனாய், உட்கார்ந்துகொண்டிருப்பதைக் கண்டு,

"கிருஷ்ணா! என்ன? சிந்தாசாகரத்தில் மூழ்கி இருக்கிறாயே." என்று கூறவே, கிருஷ்ணன், தன் சிரத்தைத் தூக்கி, கிட்டுவைக் கண்டதும்,

"இன்று நாம் ஆடவேண்டாம்." என்றான். இதைக் கேட்டதும், கிட்டு வியப்புற்று,

"ஏன்? செட்டியார் வீட்டிலிருக்கிறாரோ?" என்று வினவ, கிருஷ்ணன்,

"செட்டியார் வீட்டிலில்லை. ஆனால் எனக்கு தூக்கம் வருகிறது." என்று விடையளித்தான்.

கிட்டு, எப்படியாகிலும் அன்று கிருஷ்ணனுடைய குணதைக் கண்டுபிடிக்கத் தீர்மானித்திருந்தானாகையால்,

"நாம் அதிகநேரம் ஆடவேண்டாம். ஒருமணி நேரத்திற்கெல்லாம் நிறுத்திவிடுவோம்." என்று வற்புறுத்திக் கூறவே, கிருஷ்ணன் மறுபடியும் மறுக்க, கிட்டு, "நீ இன்று ஆடுவதாயிருந்தால் நான் உனக்குக் கொடுக்கவேண்டிய பணத்தை இதோ ஆட்டம் முடிந்ததும் கொடுப்பேன்." என்றான். இதைக் கேட்டதும், கிருஷ்ணன் ஆவலுடன்,

"இது வாஸ்தவமா? எங்கே? முதலில் பணத்தைக் காண்பி." என்று கூறவே, கிட்டு, தன் பணப்பையை எடுத்து, தந்திரமாய் அதிலிருந்த சில 10 ரூ. நோட்டுகளைக் காண்பித்து,

"இதில் 550 ரூ. இருக்கிறது." என்று சொல்லவே, கிருஷ்ணனும் நம்பிவிட்டான். அவன்,

"அப்படியானால் உன்னுடைய பிராமிஸரி நோட்டைக் கொண்டுவரட்டுமா?" என்று கேட்க, கிட்டு கொண்டு வரும்படி கூறவே, கிருஷ்ணன் ஆவலுடன் எழுந்துசென்று சமீபத்திலிருந்த ஒரு பெட்டியிலிருந்து அப் பிராமிஸரி

நோட்டையும் ஒரு சீட்டுக்கட்டையும் எடுத்துவந்தான். கிட்டு,

“முதலில் ஆடுவோம். பிறகு கணக்கைப் பார்ப்போம்.” என்று கூறவே, கிருஷ்ணனும் சம்மதித்து, நோட்டை ஜாக்கிரதையுடன் தன் மடியில் வைத்துக்கொண்டு, தன் கையிலிருந்த சீட்டுக்கட்டைப் பிரித்தான்.

பிறகு இருவரும் ஆடவாரம்பித்தார்கள். அரைமணி நேரத்திற்குள் வழக்கம்போல் கிருஷ்ணன் கிட்டுவிடமிருந்து ரூ. 6க்குமேல் ஜயித்துவிட்டான். அச்சமயம் கிட்டு,

“அடாடா! மறந்தேபோய்விட்டேன்.” என்று கூறியவண்ணம் தன் சட்டைப்பையிலிருந்து ஒரு புதிய சீட்டுக்கட்டை எடுத்து, “இதை வைத்துக்கொண்டு கொஞ்சநேரம் ஆடுவோம்.” என்று கூறினான்.

கிருஷ்ணன், கொஞ்சநேரம் தயங்கிவிட்டு, பிறகு தான் ஆக்ஷேபிப்பது சந்தேகத்திற்கிடமென்று நினைத்தவன்போல்,

“ஆகா! அப்படியே செய்வோம்.” என்று சம்மதித்து, தன் கட்டை எடுத்து பக்கத்தில் வைத்துக்கொண்டான். பிறகு புதுக்கட்டை வைத்துக்கொண்டு இருவரும் மேலும் அரைமணிநேரம் ஆடினார்கள். ஆனால் அந்த அரைமணி சாவகாசத்திற்குள் தான் தோற்ற 6 ரூபாயை ஜயித்துக்கொண்டதுமன்றி, கிருஷ்ணனிடமிருந்து மேலும் 6 ரூ. ஜயித்துக்கொண்டான். இதைக் கண்ட கிருஷ்ணன்,

“சரி. நீ சொன்ன ஒருமணிநேரமாய்விட்டது. ஆட்டத்தை நிறுத்துவோம்.” என்று கூறவே, கிட்டு,

“அப்படியே செய்வோம். சரி; பிராமிஸரிநோட்டை எடு. கணக்கைப் பார்ப்போம். முதலில் எனக்குக் குடிக்க கொஞ்சம் ஜலம் கொண்டுவா.” என்று சொல்லவே, கிருஷ்ணன் எழுந்து பக்கத்திலிருந்த சமையலறைக்குள் சென்றான். அவன் தலை மறைந்ததும், கிட்டு, பழைய சீட்டுக்கட்டை எடுத்து, அதிலுள்ள சீட்டுக்களையெல்லாம் கவனிக்க, அவைகளில் முக்கியமான ஒவ்வொரு சீட்டிலும் மிகவும் தந்திரமாய் செய்யப்பட்ட ஒரு அடையாளமிருப்பதைக் கண்டான். உடனே, அவைகளைத் தன் வேஷ்டிக்குள் ஒளித்து வைத்துக்கொண்டு, கிருஷ்ணனுடைய வரவை அடக்க இயலாத ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணமிருந்தான். மறுநிமிஷம், கிருஷ்ணன் கையில் ஜலத்துடன் திரும்பிவந்ததும் கிட்டு, அதை வாங்கிக் குடித்துவிட்டு, அமைதியுடன்,



“வா; இப்படி உட்கார்ந்துகொள்.” என்று தன் பக்கத்தில் இடம் காட்டவே, கிருஷ்ணனும் அவன் சமீபத்தில் உட்கார்ந்துகொண்டான்.

கிருஷ்ணனுக்கு சுமார் 26 வயதிருக்கும். நல்ல சரீரக்கட்டுள்ளவன்.

நிற்க, கிட்டு, கொஞ்சநேரம் கிருஷ்ணனை உற்றுநோக்கியவண்ணம் இருந்துவிட்டு, திடீரென்று பாய்ந்து, அவனுடைய குடுமியைத் தன் இடதுகரத்தால் பற்றிக்கொள்ளவே, கிருஷ்ணன் திகைப்புற்று அக் கரத்தைத் தன் இரு கைகளாலும் பிடித்துக்கொண்டான். உடனே கிட்டு தன் வலது கரத்தை உபயோகித்து கிருஷ்ணனுடைய மடியில் இருந்த தன் பிராமிஸரிநோட்டைப் பிடுங்கிக்கொண்டான். பிறகு அவனுடைய குடுமியை விட்டுவிட்டு,

“டேய்! போக்கிரிநாயே! நீ ஆட்டத்தில் செய்யும் சூது முழுமையும் எனக்குத் தெரியும். இதோ பார்; இச் சீட்டுகளில் நீ செய்திருக்கும் அடையாளங்கள்.” என்று சொல்லிக்கொண்டே தான் ஒளித்துவைத்துக்கொண்டிருந்த சீட்டுகளை எடுத்து, கிருஷ்ணனுடைய முகத்தில் கோபத்துடன் எறிந்தான்.

கிருஷ்ணன் கொஞ்சநேரம் இஞ்சி தின்ற குரங்குபோல் விழித்தான். ஆனால் சீக்கிரம் தன் தடுமாற்றத்தை மறைத்துக்கொண்டு, கண்களில் தீப்பறக்க,

“அடே! மரியாதையாய் அந்த நோட்டைத் திருப்பிக் கொடுத்துவிடு. இல்லாவிட்டால் நான் என்ன செய்வே

னென்பது எனக்குத் தெரியாது.” என்றான். ஆனால் கிட்டு, அலக்ஷியமாய்,

“ சிச்சீ ! வாயை மூடு.” என்று கூறியவண்ணம் தன் கையிலிருந்த நோட்டைக் கிழிக்குந்தருவாயில் இருந்தான். ஆனால் அச்சமயம் கிருஷ்ணன் அவன்மீது பாய்ந்து, அவனை அப்படியே கீழே தள்ளி, அவனுடைய கையிலிருந்த நோட்டை மறுபடியும் தன்வசமாக்கிக்கொண்டான். பிறகு சுமார் 5 நிமிஷநேரம் இருவருக்கும் யுத்தம் நடந்தது. அதில் இருவரும் கண்டபடி அடித்துக்கொண்டதால் இருவருடைய சரீரத்திலும் பல சிறு காயங்கள் ஏற்பட்டன.

நிற்க, அவ் இருவரும் அவ்விதம் யுத்தம் செய்து கொண்டிருக்கையில் பாலகிருஷ்ணசெட்டியாருடைய வீட்டின் முன்கட்டில் படுத்துக்கொண்டிருந்த ராமன் என்ற வேலைக்காரன், அவர்கள் உரத்த குரலில் பேசிய சப்தத்தைக் கேட்டு, என்ன விஷயமென்று பார்க்கும்பொருட்டு, அங்கு வந்து ஒரு மறைவில் நின்றுகொண்டான்.

கிட்டுவும் கிருஷ்ணனும் மேலும் கொஞ்சநேரம் சண்டையிட்டுவிட்டுக் கடைசியில் விலகினார்கள். கிருஷ்ணன், பிராமிஸரிநோட்டை மிகவும் ஜாக்கிரதையுடன் வைத்துக்கொண்டு, ரௌத்திராகாரத்துடன் கிட்டுவை நோக்கி,

“அடே! நாளை மாலை 5 மணிக்குள் என் பணம் வந்து சேரவேண்டும். இல்லாவிட்டால் நான் என்ன செய்வேன் என்பது உனக்கே தெரியும். இருக்கட்டும்; பொழுது விடிந்ததும் நீ செய்த காரியத்தை நாகராஜய்யரிடம் சொல்லுகிறேன்.” என்று பயமுறுத்தவே, கிட்டு ஏதோ விடையளிக்குந்தருவாயில் இருந்தான். ஆனால் அச்சமயம் நாகராஜய்யருடைய அத்தான் பிள்ளை சாம்பசிவன், அங்கு தோன்றி பரபரப்புடன்,

“ கிட்டு. வா வா. அவர் (நாகராஜய்யர்) உன்னைக் கூப்பிடுகிறார்.” என்று கூறவே, கிட்டு, திடுக்கிட்டவனாய் கவலையும் பீதியும் கலந்த குரலில்,



18293

“ஏன்?” என்று [illegible] வினவிக்கொண்டே வெளியே சென்றான். சாம்பசிவன்,

“ உன் தங்கை சாரதத்தைத் தேள் கொட்டிவிட்டது. உன்னிடம் அதற்கு ஏதோ மருந்து இருக்கிறதாம்.” என்று விடையளிக்கவே, கிட்டு, தடுமாற்றத்துடன்,

“ ஆனால் நான் வீட்டிலில்லை என்பது அவருக்குத் தெரியுமோ ?” என்று வினவினான். சாம்பசிவன்,

“ அவருக்குத் தெரியாது. சாரதம் தேள் கொட்டியதும் ‘ ஐயோ! ’ என்று வீரிட்டலறிய சப்தத்தைக் கேட்டு நான் மாடிக்குச் சென்றேன். என்னைப் பார்த்ததும் அவர் (நாகராஜய்யர்) உன்னிடம் மருந்திருப்பதாகவும் என்னை உடனே சென்று வாங்கிவரும்படியும் கூறினார். நான் உடனே இங்கு ஓடிவந்தேன்.” என்றான்.

நிற்க, சாம்பசிவனுக்கு அந்நேரத்தில் கிட்டு பாலகிருஷ்ணசெட்டியாருடைய வீட்டிலிருப்பானென்பது தெரியக் காரணமென்ன என்பதைக் கவனிப்போம். அன்று மாலை கிட்டுவின் மனைவி, பயிஷ்டையாய்விட்டதால் சாம்பசிவன் தான் கிட்டுவின் அறையில் படுத்துக்கொள்ளுவதாய்ச் சொல்லவே, கிட்டு அதில் தனக்கு இஷ்டமில்லாவிட்டாலும் கூடாதென்று மறுக்கமுடியாமல் சம்மதித்தான். ஆகவே, அவன் தன் வழக்கப்படி ரங்காடப் போகுமுன் தன் இரஹஸ்யத்தை சாம்பசிவனிடம் ஒப்புக்கொள்ள வேண்டியதாய்விட்டது.

கிட்டு தன் அறைக்குச் சென்றதும், அவசரத்துடன் தன் பெட்டியைத் திறந்து வேண்டிய மருந்தை எடுத்துக் கொண்டு, மாடிக்கு ஓடினான். அங்கு, சாரதத்தைச் சுற்றி நாகராஜய்யர், அவருடைய சம்சாரம், இன்னும் சில வேலைக்காரர்கள் இவர்களெல்லோரும் நின்றுகொண்டிருந்தனர். நாகராஜய்யர், கிட்டுவைக் கண்டதும், கொஞ்சம் கோபத்துடன்,

“ ஏண்டா! இந்த மருந்து கொண்டுவருவதற்கு இவ்வளவு தாழியா?” என்று கூறிக்கொண்டே அம் மருந்தை வாங்கி தன் மனைவியிடம் கொடுத்தார்.

பிறகு கிட்டத்தட்ட அரைமணிநேரம்வரையில் எல்லோரும் காரதத்தை சமாதானப்படுத்தியவண்ணமிருந்தனர். சாதாரணமாகவே தனவந்தர்களுடைய வீட்டுக் குழந்தைகளுக்கு எள்ளளவு அபாயம் நேரிட்டபோதிலும் அதை அவர்கள் மலைபோல் பாவித்து தடபுடல் செய்வது அனைவரும் அறிந்த விஷயம். எல்லோரும் அங்கு நின்றுகொண்டிருக்கும்பொழுது, தான் போவது பிசகென்று நினைத்து கிட்டுவும் அந்த அரைமணிநேரம் அங்கு நின்றுவிட்டு, பிறகு சாம்பசிவனுடன் கீழே சென்றான்.

கிட்டு கிருஷ்ணனுடன் சண்டையிட்டுக்கொண்டிருந்ததை சாம்பசிவன் பார்த்துவிட்டானாகையால் அவன், அவ்வறைக்குள் நுழைந்ததும்,

"கிட்டு! நீ இவ் வழக்கத்தை விட்டுவிடுவதே நலம் என்று நினைக்கிறேன்." என்றான். உடனே கிட்டு,

"இனிமேல் நான் சீட்டைக் கையால் தொடமாட்டேன். ஆனால் நான் இப்பொழுது மாட்டிக்கொண்டிருக்கும் இவ் ஆபத்திலிருந்து எப்படியாவது தப்பவேண்டும். இந்தப் பயல் (பரிசாரகன் கிருஷ்ணன்) இவ்வளவு அயோக்கியன் என்பது எனக்குத் தெரியாது. அவன் என்னைக் கண்டிப்பாய் அவமானப்படுத்துவான். இருக்கட்டும்; அவனை லேசில் விடேன்." என்றான்.

அச்சமயம் கிட்டுவின் முகத்தை உற்றுநோக்கியவண்ணமிருந்த சாம்பசிவன் திடீரென்று திடுக்கிட்டான். அவன், உடனே,

"ஏண்டா கிட்டு! உன் வலது காதில் கடுக்கனில்லையே." என்று கூறினான். இதைக் கேட்டதும் கிட்டு, திடுக்கிட்டவனாய், தன் வலது காதைத் தடவிப்பார்த்ததும்,

"அது அவனுடைய (கிருஷ்ணனுடைய) அறையில் விழுந்திருக்கவேண்டும். நான் போய்ப் பார்த்துவிட்டு வருகிறேன்." என்று கூறிக்கொண்டே மறுபடியும் வெளியே சென்றான்.



ஆனால் அரைமணி நேரத்திற்கெல்லாம் கிட்டு, மறுபடியும் தன் அறைக்குத் திரும்பிவந்தபொழுது அவனுடைய முகம் வெளுத்து பார்ப்பதற்கே விகாரமாயிருந்தது. அவனுடைய கைகால்கள் நடுங்கிக்கொண்டிருந்தன. உள்ளே நுழைந்தவன் அவசரத்துடன் பக்கத்தில் படுத்துக்கொண்டிருந்த சாம்பசிவனைக் கவனித்தான். அச்சமயம் அவ்வறையில் இன்னும் விளக்கொன்று எரிந்துகொண்டிருந்தது. சாம்பசிவன் அயர்ந்து தூங்குவதைக் கண்டதும், கிட்டு தன் வேஷ்டியைக் கவனித்தான். உடனே அவனுடைய முகம் மேலும் வெளுத்தது. ஏனெனில், அவ்வேஷ்டியில் பலவிடங்களில் இரத்தக்கறைகள் தென்பட்டன. மறுவினாடி, தலை சுயள, நிற்கவும் சக்தியற்று, அப்படியே தரையில் வெட்டுப்பட்ட மரம்போல் விழுந்தான்.

---

## அத்தியாயம் 11.

மறுநாட் காலை 8 மணி இருக்கும்.

பாலகிருஷ்ணசெட்டியாருடைய வீட்டில் பரிசாரகன் கிருஷ்ணனைத் தவிர இரு வேலைக்காரர்கள் உண்டென்று கூறினோமல்லவா? அவ்விருவரும் அவ் வீட்டுத் தோட்டத்தில் நின்றுகொண்டு பேசிக்கொண்டிருந்தார்கள். அதில் ஒருவனுடைய பெயர் ராமனென்பதும் அவன், முதல்நாள் இரவு கிட்டுவும் கிருஷ்ணனும் யுத்தம் செய்துகொண்டிருக்கையில், மறைவில் நின்றுகொண்டு, கவனித்துக்கொண்டிருந்தானென்பதும் நம் நேயர்கள் அறிந்தவிஷயம். ராமனுக்கும் கிருஷ்ணனுக்கும் ஆதியிலிருந்தே கொஞ்சம் மனஸ்தாபமுண்டு. ஆகவே, அன்று பாலகிருஷ்ணசெட்டியார் வீட்டிற்கு வந்ததும், அவன் அவரிடம் அவ்விதம் கிருஷ்ணனும் கிட்டுவும் அவ் வீட்டில் தினந்தோறும் ரங்காடுவதைச் சொல்லி கிருஷ்ணனுக்கு வெடிவைக்கத் தீர்மானித்திருந்தான். அவன், தன் பக்கத்தில் நின்றுகொண்டிருந்த மற்றொரு வேலைக்காரனாகிய குமாரனை நோக்கி,

“குமாரா 1 இன்று நான் இந்தப் பாப்பானைத் (கிருஷ்ணனை) தொலைக்காமலிருப்பதில்லை.” என்று உறுதியுடன் கூறவே, குமரன், வியப்புற்று ஆவலுடன்,

“ஏன்? அவர் செய்ததென்ன?” என்று வினவினான். உடனே ராமன், முதல் நாளிரவு அவ் வீட்டில் நடந்த எல்லா விஷயத்தையும் கூறிவிட்டு,

“நான் அடுத்தவீட்டு ஐயர் (கிட்டு) சென்றதும் கிருஷ்ணய்யரிடம் போய் அவர்கள் இவ்விதம் பேசிக்கொண்டிருந்ததை செட்டியாரிடம் சொல்லப்போகிறேனென்று நான் கூறியதும் அந்தப் பாப்பான் என்ன பதில் சொன்னான் தெரியுமா? இருக்கட்டும்; இன்று அவனை ஒழிக்காமல் விடுவதில்லை.” என்று மறுபடியும் சபதம் செய்துகொண்டான். குமரன்,

“ஆமாம். அவர் என்ன பதில் சொன்னார்?” என்று வினவ, ராமன்,

“என்ன சொன்னான்? குமரா! அவன் பலே போக்கிரி. நான் செட்டியார் என்று சொன்னதும், அவன் கன அலக்ஷியமாய், “போடா போ; நீயோ உன் செட்டியாரோ? செட்டியார் என்னடா செய்துவிடுவார்? என் தலையைக் கிள்ளிவிடுவாரோ? செட்டிப்பயல் என்னிடம் வந்தாலல்லவோ தெரியும்? அவன் தான் என் காலில் விழவேண்டும்.” என்றான். பார்த்தாயா பாப்பானுடைய திமிறை? இருக்கட்டும்; செட்டியார் வந்ததும் இவனுக்குச் சொல்லுகிறேன் வழி. என்ன? மணி 6க்குமேலாய்விட்டதே. அவர் (செட்டியார்) இன்னும் வரவில்லையே.” என்றான்.

செட்டியார் தினந்தோறும் இரவில் தன் வீட்டில் படுப்பதில்லை என்பது நம் நேயர்களறிந்தவிஷயம். அவர் இரவு முழுமையும் தன்னிஷ்டப்படி வெளியே கழித்துவிட்டு, காலை 6மணிக்குள் வீட்டிற்குத் திரும்பிவருவதும், வந்ததும் காப்பி சாப்பிட்டுவிட்டு உடனே படுத்துக்கொண்டு பிற்பகல் 1மணிவரையில் நன்றாய்த் தூங்குவதும், பிறகு எழுந்து அவசரத்துடன் தன் ஸ்நான போஜனாதிகளை முடித்துக்கொண்டு மறுபடியும் மாலை 6மணிவரையில் தூங்குவதும் வழக்கம்.



நிற்க, ராமன் செய்யப்போகும் விஷமத்தை அறிந்ததும் குமரன் அவ் விஷயத்தை பரிசாரகன் கிருஷ்ணனிடம் சொல்லும்பொருட்டு பின்பக்கம் சென்றான். தினந்தோறும் கிருஷ்ணன் காலை 5மணிக்கே எழுந்து செட்டியாருக்கு காப்பி பலகாரம் இவைகளைச் செய்யவாரம்பித்துவிடுவது வழக்கமாகையால் அன்று குமரன் சமையலறையைக் கவனித்தபொழுது அது இன்னும் வெளிப்பக்கம் பூட்டப்பட்டிருப்பதைக் கண்டதும் வியப்புற்று பக்கத்திலிருந்த கிருஷ்ணன் படுத்துக்கொள்ளும் அறைக்குச் சென்றான். அதன் கதவு திறந்தே இருந்தது. ஆனால் உள்ளே நுழைந்த குமரன் மறுவினாடி பிசாசைக் கண்டவன்போல் “அடே ராமா! அடே ராமா!” என்று அலறியவண்ணம் வெளியே ஓடினான்.

அதற்குக் காரணம், அவ்வறையில் பரிசாரகன் கிருஷ்ணன் கோரமாய்க் கொலை செய்யப்பட்டுக் கிடந்தான். அவனுடைய மண்டையிலிருந்த ஒரு பெரிய காயத்திலிருந்து இரத்தம் பிரவாகமாய் வெளிக்கிளம்பி தரையில் ஆறுபோல் தோய்ந்திருந்தது.

வக்கீல் நாகராஜய்யருடைய வீட்டிற்கெதிரில் இருபக்கங்களிலும் பெரிய மரங்களுள்ள ஒரு அழகிய சாலையுண்டு. அது சுமார் இரண்டுமைல் நீளமிருக்கும். நாகராஜய்யர் தினந்தோறும் காலை $5\frac{1}{2}$ மணிக்கே தன் படுக்கையிலிருந்து எழுந்து சுமார் 1 மணி நேரம் அச் சாலையில் உலாவுவது வழக்கம். அன்று அவர், தன் வழக்கப்படி உலாவிவிட்டு பாலகிருஷ்ண செட்டியாருடைய வீட்டின் சமீபம் வந்தபொழுது, அவ் வீட்டுத் தோட்டத்தில் ராமனும் குமரனும் திகைப்புற்று மேலே என்ன செய்வதென்று புரியாமல் நிற்பதைக் கண்டார். இதற்குள் ராமன் கிருஷ்ணனைக் கொலைசெய்தது நாகராஜய்யருடைய தமயன் பிள்ளை கிட்டுவேயென்று தீர்மானித்துவிட்டானென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. நாகராஜய்யர் அவர்களுடைய பீதியையும் தடுமாற்றத்தையும் கண்டு ஆச்சரியப்பட்டவராய் அவ் வீட்டை நோக்கி துரிதமாய் நடந்தார். ஆனால்

அவர் அவ் வீட்டின் தோட்டத்திற்குள் நுழையுமுன், எதிர் திசையிலிருந்து ஒரு மோட்டார் வண்டி வேகமாய் வந்து அதற்கெதிரில் நிற்கவே, அதிலிருந்து பாலகிருஷ்ண செட்டியார் மிகவும் கம்பீரத்துடன் கீழே இறங்கினார். அவர், நாகராஜய்யரைப் பார்த்ததும், மரியாதையுடன் அவரை நமஸ்கரித்துவிட்டு உடனே தன் வீட்டிற்குள் போகாமல் அவர் தன்னிடம் வரும் வரையில் சாலையிலேயே நின்றுகொண்டிருந்தார். ஆனால் செட்டியாரைக் கண்டதும் ராமனும் குமாரனும் அவரிடம் ஓடிவந்து, பரிசாரகன் கிருஷ்ணன் கொலைசெய்யப்பட்ட விஷயத்தை தடுமாற்றத்துடனும் சொல்லொணா பீதியுடனும் சொல்லிமுடிக்கவே, செட்டியாரும வக்கீல் நாகராஜய்யரும் அப்படியே ஸ்தம்பித்து நின்றனர். பிறகு எல்லோரும் கிருஷ்ணன் கிடந்த அறைக்குச் சென்றார்கள். கடைசியில அவ்வறைக்குள் நுழைந்து, அங்கு காணப்பட்ட சாக்ஷியைக் கண்டதும் நாகராஜய்யர் தன் கண்களை மூடிக்கொண்டு முகத்தைத் திருப்பிக்கொண்டார். செட்டியார், அவரை யழைத்துக்கொண்டு வெளியே வந்து, கெஞ்சிய குரலில்.

"நாகராஜய்யர்வாள்! இப்பொழுது நாம் என்ன செய்யவேண்டும்? எனக்கொன்றும் தோன்றவில்லையே." என்று கேட்க, நாகராஜய்யர்,

"உடனே உம்முடைய ஆட்களில் ஒருவனைப் போலீஸ் ஸ்டேஷனுக்கு அனுப்பும். அவர்கள் வரும் வரையில் நாம் ஒன்றும் செய்வதற்கில்லை." என்றார்.

உடனே ராமனும் குமாரனும் போலீஸ் ஸ்டேஷனை நோக்கி ஓடினார்கள்.

அவர்கள் சென்றதும், செட்டியார் நாகராஜய்யரை நோக்கி,

"ஸ்வாமி! இதென்ன அநியாயம்?" என்று பெருமூச்செறிந்தார்.

அரை மணி நேரத்திற்கெல்லாம் இரண்டு மூன்று மோட்டார் வண்டிகள் வந்து செட்டியாருடைய வீட்டிற்



கெதிரில் நிற்கவே, அவைகளிலிருந்து சில போலீஸ் உத்தியோகஸ்தர்களும் பல சேவகர்களும் கீழே இறங்கினார்கள். நாம் சொன்ன உத்தியோகஸ்தர்களில் ஒருவராகிய அவ்வூர் இன்ஸ்பெக்டர் ஜம்புநாதய்யர் மகா சாமர்த்தியவானென்று அவ்வூரில் அனைவரும் சொல்லிக்கொண்டனர். அவர், வரும்பொழுதே வேலைக்காரன் ராமனிடமிருந்து முதல் நாளிரவு கிட்டுவுக்கும் கிருஷ்ணனுக்கும் நடந்த சகல விஷயங்களையும் தெரிந்துகொண்டுவிட்டாராகையால், கீழே இறங்கியதும் பக்கத்திலிருந்த சேவகர்களில் சிலரை சென்று நாகராஜய்யருடைய வீட்டை நாலாபக்கங்களிலும் கவனித்துக்கொள்ள அனுப்பிவிட்டார். ஆனால் அவர், "அப்படியே அந்தப் பையன் (கிட்டு) இதைச் செய்திருந்தால் இதற்குள் ஓடியிருப்பானென்பது நிச்சயம்." என்று தன்னுள் சிந்தித்துக்கொண்டே செட்டியாருடைய வீட்டிற்குள் நுழைந்தார். அவர் சவம் கிடந்த அறையின் சமீபம் வந்தபொழுது, அங்கு வக்கீல் நாகராஜய்யர் நின்றுகொண்டிருப்பதைக் கண்டதும் அவரை மரியாதையுடன் நமஸ்கரித்தார். அவர், நாகராஜய்யருடைய பெருந்தன்மையையும் உதார குணத்தையும் நன்கறிந்தவராகையால், அவருடைய தமயன் பிள்ளை கிட்டு அக்கொலையில் சம்பந்தப்பட்டிருப்பதை அறிந்ததும், அவருக்குண்டான விசனத்திற்களவில்லை. ஆனால் அதுவரையில் நாகராஜய்யருக்கு தன் தமயன் பிள்ளை அதில் சம்பந்தப்பட்டிருப்பது தெரியாதாகையால், அவர் ஜம்புநாதய்யருடைய முகத்தில் காணப்பட்ட விசனக் குறிகளைக் கண்டதும் ஆச்சர்யப்படலானார். அதுவுமன்றி, வேலைக்காரன் ராமன் அங்கு வந்ததுமுதற்கொண்டு, தன்னை வெறுப்புடன் நோக்கியவண்ணம் நிற்பதைக் கண்டதும், அவருடைய ஆச்சர்யம் வரவர கலவரமாக மாறியது.

நிற்க, போலீஸ் இன்ஸ்பெக்டர் அங்குவந்த 5 நிமிஷ நேரத்திற்கெல்லாம் அவ்வூர் டாக்டர் சபாபதிபிள்ளையும் வந்துசேரவே, அவரும் இன்ஸ்பெக்டர் ஜம்புநாதய்யரும் சவம் கிடந்த இடத்திற்குச் சென்றார்கள்.

அதேசமயம் வக்கீல் நாகராஜய்யருடைய வீட்டில் என்ன நடந்ததென்று கவனிப்போம். இதற்குள் அவ் வீட்டில் எல்லோருக்கும் பக்கத்து வீட்டில் கொலைநடந்த விஷயம் தெரிந்துவிட்டது. கிட்டுவின் அறையில் அவனும் சாம்பசிவனும் உட்கார்ந்துகொண்டிருந்தனர். கிட்டுவின் முகம் வெளுத்து பார்ப்பதற்கே மிகவும் விகாரமாயிருந்தது இன்னும் அதில் தென்பட்ட பீதியும் குழப்பமும் அளவற்றது. அவன் பக்கத்திலிருந்த சாம்பசிவனை உற்று நோக்கியது "சாம்பசிவா! இனி நான் தப்புவது அசாத்தியம்." என்று கூறுவதுபோலிருந்தது. சாம்பசிவன், அவனைத் தொட்டு,

"கிட்டு! நீ இப்படி நடுங்குவது பிசகு. உன் முகத்தைப் பார்த்தாலே பயங்கரமாயிருக்கிறது. தைர்யமாயிரு. நீ நேற்று கிருஷ்ணனுடன் சண்டைபோட்டதையும், பிறகு மறுபடியும் அங்குசென்றதையும் ஒருவரும் கவனிக்கவில்லை என்று நீயே சொல்லுகிறாய். அப்படியானால் போலீஸார் உன்னை எப்படி சந்தேகிக்கமுடியும்?" என்று வினவ, கிட்டு, சொல்லொணா கவலையுடனும் தடுமாற்றத்துடனும்,

"போலீஸார் என்னை சந்தேகிக்க பல வழிகளுண்டு. ஆனால் நான் நடுங்குவதில் பிரயோஜனமில்லை என்பது வாஸ்தவமே. இனிமேல் நான் ஓடுவதும் முடியாத கார்யம். நான் ஓடும்பக்ஷத்தில் அது மேலும் சந்தேகத்திற்கிடம். அப்படியே போலீஸார் இங்கு வந்தால் நான் உள்ளதை ஒப்புக்கொண்டுவிடுகிறேன்." என்றான். சாம்பசிவன்,

"நீ அனாவசியமாய் பயப்படுகிறாய். உன்னை போலீஸார் எப்படி சந்தேகிக்கக்கூடும்? அவ்வறையில் விழுந்த உன் கடுக்கனும் அகப்பட்டுவிட்டது. இரத்தக்கறைகளுடன் இருந்த உன் துணிமணிகளையும் அடக்கம் செய்துவிட்டோம். நீ அவனுடைய அறைக்குள் சென்றாயென்பதை எப்படி ரூபிக்கமுடியும்? இன்னும் நீ அவனைக் கொலைசெய்யக் காரணமென்ன? நீ அவனுக்கு எழுதிக்கொடுத்த பிராமிஸரிநோட்டையும்—" என்று மேலே பேசுமுன், கிட்டு,



"சாம்பசிவா! மறந்தேவிட்டேன். அந்தப் பிராமிஸரிநோட்டு நான் வரும்வழியில் எங்கேயோ விழுந்துவிட்டது. ஹா! தெய்வமே!—" என்று மேலே பேசச் சக்தியற்றவனாய், கைகால்கள் சோர்வுற்று, அப்படியே தன் படுக்கையில் சாய்ந்துவிட்டான்.

இப்பொழுது மறுபடியும் பாலகிருஷ்ணசெட்டியார் வீட்டில் நடந்த விஷயத்தைக் கவனிப்போம். டாக்டர் சபாபதிபிள்ளை உள்ளே சென்று சவத்தின் மண்டையில் காணப்பட்ட காயத்தைப் பார்த்ததும் ஒருதரம் பெருமூச்செறிந்தார். பிறகு, "இது ஒரு பெருந்தடியால் ஏற்பட்ட காயம். பாவம்! இவன் கூச்சலிடவும் முடிந்திருக்காது." என்று கூறியவண்ணம் தான் மேலே செய்யவேண்டிய கார்யங்களைக் கவனிக்கலானார்.

போலீஸ் இன்ஸ்பெக்டர் ஜம்புநாதய்யர் அவ்வறையை சோதித்துவிட்டு, மறுபடியும் வெளியேவந்து, பாலகிருஷ்ண செட்டியாரை சில கேள்விகள் கேட்டபிறகு, வக்கீல் நாகராஜய்யரை நோக்கி நடந்தார். இதற்குள் நாகராஜய்யர் ஒன்றும் புரியாமல் திகைப்புற்று சிலைபோல் நின்றுகொண்டிருந்தார். ஜம்புநாதய்யர் அவரைத் தனிமையில் அழைத்துச்சென்று, முதல்நாளிரவு நடந்த விஷயத்தையெல்லாம் விபரமாய்க் கூறவே, நாகராஜய்யர் ஓங்கி தன் மண்டை மீது அடிக்கப்பட்டவர்போல் காணப்பட்டார். அவர் நிற்கவும் முடியாமல் தள்ளாடவே, ஜம்புநாதய்யர் அநுதாபத்துடன் அவரைப் பிடித்துக்கொண்டார். பிறகு நாகராஜய்யர்,

"ஜம்புநாதய்யர்வாள்! என் தமயன் பிள்ளையிடம் சில கெட்டவழக்கங்களுண்டென்பதை நான் ஒப்புக்கொள்ளுகிறேன். ஆனால் அவன் கொலைசெய்வானென்பதை நான் நம்பவேமாட்டேன். சரி; நீர் நியாயப்படி செய்யவேண்டியதைச் செய்யும். எனக்காக நீர் தயங்கவேண்டாம்." என்று கூறவே, ஜம்புநாதய்யர்,

"நாகராஜய்யர்வாள்! இதுவரையில் நீங்களும் எவ்வளவோ கொலைக் கேஸ்களை நடத்தியிருக்கிறீர்கள். நானும்

சில கேஸ்களைக் கண்டுபிடித்திருக்கிறேன் என்பதை மிகவும் தாழ்மையுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். இதை உங்களுடைய தமயன் பிள்ளை செய்திருக்கமாட்டானென்பது நிச்சயம். கொலைசெய்யப்பட்டிருக்கும் பையனுடைய மண்டையிலுள்ள காயத்தைப் பார்த்தால் அவனை அடித்தவன் பூர்வஜன்மத்தில் நாய் அடிக்கும் தோட்டியாயிருந்திருக்கவேண்டும். நீங்கள் என்னைப்பற்றி கவலைப்படவேண்டாம், ஆனால் நான் உங்களுடைய பையனை ஒருக்கால் கைது செய்யவேண்டியிருக்கும்.'' என்று அவர் மேலே பேசத் தயங்கினார். அதைக் கண்ட நாகராஜய்யர்,

“ஜம்புநாதய்யர்வாள்! இது கலியுகம். ஆகவே நான் எதற்கும் கவலைப்படப்போவதில்லை. சரி; வாரும். வேண்டுமானால் உடனே போய் என் தமயன் பிள்ளையைப் பார்ப்போம்.'' என்று கூறவே, அவ்விருவரும் அவ்விடத்திலிருந்து சென்றார்கள். ஆனால் கொஞ்ச தூரம் சென்றதும், ஜம்புநாதய்யர் பாலகிருஷ்ண செட்டியாருடைய வீட்டிற்கும் நாகராஜய்யருடைய வீட்டிற்கும் இடையிலிருந்த சுவரைக் காண்பித்து,

“உங்களுடைய தமயன் பிள்ளை தினந்தோறும் இதை எறிக்குதித்துத்தான் இவ்வீட்டிற்கு வருவது வழக்கமாம். ஆகையால் நாம் இதை கவனிக்க வேண்டியது அவசியம்.'' என்று கூறிக்கொண்டே அதை நோக்கி நடந்தார். அச் சுவரில் வெள்ளையென்று சுண்ணாம்பு நன்றாய் அடிக்கப்பட்டிருந்தது. ஜம்புநாதய்யர் அதன் ஒரு பாகத்தின் சமீபம் வந்ததும் திடுக்கிட்டார். ஏனென்றால் அங்கு ஒருவன், அச் சுவரை எறிக்குதிக்கும்பொருட்டு, அதன் மேல் தன் கைகளை வைத்து அழுத்தும்பொழுது, அக் கைகளில் இரத்தம் இருந்திருக்குமானால் எப்பேர்ப்பட்ட சுவடுகள் விழுமோ அப்பேர்ப்பட்ட இரு சுவடுகள் காணப்பட்டன. அதைக் கண்டதும் ஜம்புநாதய்யர் ஒரு போலீஸ் சேவகனை யழைத்து, அவனிடம் தாழ்ந்த குரலில் ஏதோ கூறிவிட்டு, தானும் அச் சுவரைத் தாண்டி நாகராஜய்யர் வீட்டுப் பக்கம் குதித்தார். உடனே நாகராஜய்யரும் தன்னை யறி



யாமலே அதை ஏறி ஜம்புநாதய்யருடைய உதவியைக் கொண்டு தன் வீட்டுப்பக்கம் இறங்கினார். ஜம்புநாதய்யர் உடனே தான் நின்றுகொண்டிருந்த இடத்தைச் சோதிக்க வாரம்பித்தார். அதன் பலனாய் சமீபத்தில் ஒரு கடிதம் கிடப்பதைக் கண்டு மேலும் வியப்புற்று அதை எடுத்துப் பிரித்துப் பார்த்தவர் மறுபடியும் திடுக்கிட்டார். ஏனென்றால் அது கிட்டுவால் பரிசாரகன் கிருஷ்ணனுக்கு எழுதிக் கொடுக்கப்பட்ட பிராமிஸரி நோட்டேயொழிய வேறன்று.

நாம் சொன்ன அந்தச் சுவடுகளைக் கண்டதுமே நாகராஜய்யருடைய தைரியம் பறந்தோடிவிட்டது. ஆகவே, அப் பிராமிஸரிநோட்டையும் காணவே அவருடைய முகம் வெளுத்தது. பிறகு இருவரும் கிட்டுவின் அறையை நோக்கி நடந்தார்கள்.

நிற்க, ஜம்புநாதய்யரும் நாகராஜய்யரும் அவ்விதம் அச் சுவரைக் கவனித்ததையும், பிறகு அதை எறிக்குதித்ததையும், உடனே கீழே கிடந்த அந் நோட்டை எடுத்து வாசித்துப் பார்த்ததையும், தன் அறையில் நின்றவண்ணம் கிட்டு கவனித்துக்கொண்டேயிருந்தானாகையால், சற்று நேரத்திற்கெல்லாம் அவ்விருவரும் தன் அறைக்குள் நுழைந்ததும் பயத்தின் மிகுதியால் அப்படியே தரையில் விழுந்து மூர்ச்சையானான்.

இதற்குள் அவ்வீட்டில் வரவர குழப்பம் அதிகரித்துக்கொண்டே வந்தது. பயிஷ்டையாயிருந்த கிட்டுவின் மனைவி பார்வதி, பாலகிருஷ்ண செட்டியாருடைய வீட்டுப் பரிசாரகன் கொலைசெய்யப்பட்ட விஷயத்தை அறிந்ததும், பலவித சந்தேகங்களுக்கும் வர்ணிக்க இயலாத கவலைக்கும் உள்ளானாள். அவளுக்கும் சாரதாம்பாளுக்கும் கிட்டு தினந்தோறும் தன் அறையிலிருந்து இரஹஸ்யமாய் வெளியே சென்று கிருஷ்ணனுடன் ரங்காடுகிறானென்பது தெரியுமென்பதை நம் நேயர்களறிவார்கள். பார்வதி தன் வீட்டுத் தோட்டத்தில் நின்றுகொண்டிருந்தபொழுதே, இன்ஸ்பெக்டர் ஜம்புநாதய்யரும் நாகராஜய்யரும் கிட்டுவின் அறைக்குள் நுழைந்தார்களாகையால், அவளுடைய

பீதியும் கலவரமும் அதிகரித்தன. ஆகவே, அவர்களைக் கண்டதும் தன் புருஷன் மூர்ச்சித்து விழுந்துவிட்டான் என்பதை அறிந்ததும், அப் பெண்மணியின் மனோநிலைமையை அவ்வித நிலைமையிலிருந்த பெண்மணிகளால்தான் ஊகிக்கமுடியும். "ஐயோ!" என்று விரிட்டலறிக்கொண்டே தன் அறைக்குள் ஓடி மட்டேரென்று தரையில் விழுந்து துடித்தாள்.

அச்சமயம் சாரதமும் அவளுடைய தாயாரும் கிட்டு மூர்ச்சித்துக் கிடந்த அறையின் சமீபம் திகிலடைந்தவர்களாய் நின்றுகொண்டிருந்தார்கள். பார்வதி நாம் சொன்ன விதம் அழும் சப்தத்தைக் கேட்டதும், சாரதம் அவளிடம் ஓடி, அவள் பயிஷ்டையென்பதையும் கவனிக்காமல், அவள் பக்கத்திலுட்கார்ந்துகொண்டு தன்னால் முடிந்தவரையில் அவளைத் தேற்றலானாள்.

வரவர, நாகராஜய்யருடைய குழப்பமும் கவலையும் அதிகரித்துக்கொண்டே வந்தன. கிட்டுவைக் கண்டதும் முதலில் அவருக்குண்டான கோபத்திற்களவில்லை. ஆனால் அச்சமயமிருந்த அவனுடைய பரிதாபகரமான நிலைமையைக் கண்டதும் அவருடைய கண்களில் நீர் ததும்பியது. அதுவுமன்றி, கிட்டுவின் முகத்தைப் பார்க்கப்பார்க்க அவருடைய மனதில் அதுவரையில் கண்டுபிடிக்கப்பட்டிருந்த சாக்ஷியங்கள் அவனுக்கு எவ்வளவு விரோதமாயிருந்தபோதிலும், அவைகளெல்லாம் சந்தர்ப்ப சாக்ஷியங்களாயிருக்க வேண்டுமேயொழிய, அவன் வாஸ்தவத்தில் அக் கொலையைச் செய்திருக்கமாட்டானென்கிற நம்பிக்கை உண்டாயிற்று. ஆகவே, சற்று நேரத்திற்கெல்லாம், கிட்டு தன் மூர்ச்சை தெளிந்து கண்களைத் திறக்கவே, நாகராஜய்யர், அவனைப் பிரியத்துடன் தூக்கி, உட்காரவைத்துத் தானும் பக்கத்திலுட்கார்ந்துகொண்டு,

" கிட்டு! பயப்படாதே; தைரியமாயிரு " என்று தேறுதல் கூறவே, தன்மேல் இன்னும் அவர் அவ்வளவு பிரியம் வைத்திருப்பதைக் கண்டதும், கிட்டு, அவரை



இறுகக் கட்டிக்கொண்டு, சிறு குழந்தைபோல் விம்மிவிம்மி அழலானான்.

ஜம்புநாதய்யர் கிட்டுவின் முகத்தை உற்றுநோக்கிய வண்ணமிருந்தார். அவர் "சீச்சீ! இவன் இதை ஒருநாளும் செய்திருக்கமாட்டான்," என்று சிந்தித்தவராய், அன்புடன் கிட்டுவைத் தொட்டு,

" அப்பா! நீ பயப்படவேண்டாம். தயவுசெய்து நேற்ற இரவு நடந்த எல்லாவற்றையும் உள்ளது உள்ளபடி சொல். கேட்போம்." என்றார். நாகராஜய்யரும்,

" கிட்டு! எங்கே சரியாய் உட்கார்ந்துகொள். நேற்று இரவு வாஸ்தவத்தில் என்ன நடந்தது? எதையும் மறைக்காமல் சொல்லிவிடு." என்று கூறியவண்ணம் கிட்டுவின் நேத்திரங்களிலிருந்து பிரவாகமாய்க் கொட்டிக்கொண்டிருந்த கண்ணீரைத் துடைத்தார்.

கிட்டு, மெல்ல எழுந்து உட்கார்ந்துகொண்டு, சுமார் ஒருநிமிஷநேரம் நாகராஜய்யருடைய முகத்தை உற்றுநோக்கிவிட்டு, பிறகு தடுமாற்றத்துடன் தான் தினந்தோறும் பூமிசாரகன் கிருஷ்ணனுடன் சூதாடுவதுண்டென்பதையும், அதற்காகக் கிருஷ்ணனுக்குத் தான் பிராமிஸரி நோட்டு எழுதிக்கொடுத்ததையும், பிறகு அதுவரையில் சூதாட்டத்தில் கிருஷ்ணன் செய்துவந்த சூதைத் தான் கண்டுபிடித்த விதத்தையும், அதன் பலனாய் அவ்விருவருக்கும் நடந்த சண்டையையும், அச் சண்டை நடந்துகொண்டிருந்தபொழுது சாம்பசிவன் அங்கு வந்து தன்னை அழைத்ததையும், கடைசியில் தன் அறைக்குச் சென்றபொழுது சாம்பசிவன் தன் வலது காதில் கடுக்கன் இல்லாமலிருந்ததைப் பார்த்துச் சொன்னதையும் கூறிவிட்டு,

" நான் என் கடுக்கன் கிருஷ்ணனுடைய அறையில்தான் விழுந்திருக்கவேண்டுமென்று நினைத்து, அதைப் பார்க்கும்பொருட்டு மறுபடியும் அவனுடைய அறைக்குச் சென்றபொழுது, கிருஷ்ணன் ஏற்கனவே கொலைசெய்யப்பட்டுக்கிடந்தான். அதைக் கண்டதும் எனக்குண்டான

பயத்திற்களவில்லை. அவ்வறையில் நாங்களிருவரும் முதலில் சண்டையிட்ட இடத்தில் கெட்டுப்போன என் கடுக்கன் கிடந்தது. நான் கிருஷ்ணனுக்கு எழுதிக்கொடுத்த பிராமிஸரிநோட்டு இன்னும் அவனுடைய மடியிலேயே இருந்ததால், அது அங்கிருக்கும்பக்ஷத்தில் நானே அவனைக் கொலைசெய்தேனென்று ஏற்படுமென்று பயந்து அதையும் எடுத்துக்கொண்டு வெளியே ஓடிவந்தேன். அச்சமயம் என் கைகளிலும் வேஷ்டியிலும் இரத்தம்பட்டிருந்ததை நான் கவனிக்கவேயில்லை. ஆகவே, நான் மறுபடியும் என் அறைக்குள் நுழைந்து, விளக்கு வெளிச்சத்தில் என் கைகளிலும் வேஷ்டியிலும் இரத்தக்கறை இருப்பதைக் கண்டு திகைப்புற்று என்னசெய்வதென்று புரியாமல் தத்தளித்துக்கொண்டிருக்கையில் அதுவரையில் தூங்கிக்கொண்டிருந்த சாம்பசிவன் விழித்துக்கொண்டு என்னவிஷயமென்று கேட்க, அவனிடம் எல்லாவற்றையும் ஒப்புக்கொண்டேன். அவன், நான் பயப்படவேண்டியது அனாவசியமென்றும், என்னைப் போலீஸார் சந்தேகிக்க மார்க்கமில்லையென்றும் கூறிவிட்டு, என் வேஷ்டிகளை வாங்கி எரித்துவிட்டான். நான் பின்பக்கம் சென்று என் உடம்பை நன்றாய்க் கழுவிக்கொண்டு வந்தேன். முதலில் உடனே மாடிக்குச்சென்று எல்லாவற்றையும் (நாகராஜய்யரைக் காண்பித்து) உங்களிடமும் சொல்லிவிடலாமென்று நினைத்தேன். ஆனால் சாம்பசிவன் நான் அப்படிச் செய்வது பிசகென்று கூறவே சும்மாயிருந்துவிட்டேன். இவ்வளவுதான் விஷயம்.'' என்று முடித்தான்.

இதைக்கேட்டதும் நாகராஜய்யரும் ஜம்புநாதய்யரும் கொஞ்சநேரம் மௌனம் சாதித்தனர். ஜம்புநாதய்யர், "இப் பையன் சொல்வது முழுமையும் உண்மை என்பதில் சந்தேகமில்லை. ஆனாலும் நான் இவனை இப்பொழுது கைது செய்யாமலிருக்கமுடியாது. இன்னும் இவனை இப்பொழுது கைதுசெய்வது இவனுக்கே நலமாயிருக்கும்.'' என்று தீர்மானித்தவராய், நாகராஜய்யரைத் தனிமையில் அழைத்துச் சென்று தன் எண்ணத்தை வெளியிட்டார்.



ஆகவே, அன்று பிற்பகல் இரண்டு மணிக்குள் கிட்டு கைதுசெய்யப்பட்டான்.

## அத்தியாயம் 12.

அதேதினம் பிற்பகல் சுமார் 3மணி இருக்கும்.

அச்சமயம் வக்கீல் நாகராஜய்யருடைய விட்டில் எல்லோரும் துக்கசாகரத்திலாழ்ந்திருந்தனரென்பதை நாம் சொல்லவேண்டியதில்லை. நாகராஜய்யர் தன் அறையில் கவலையே வடிவாக உட்கார்ந்துகொண்டிருந்தார். சமீபத்தில் தரையில் அவருடைய மனைவியும் சாரதாம்பாளும் அவருடைய முகத்தை உற்றுநோக்கியவண்ணம் உட்கார்ந்துகொண்டிருந்தனர். அவ்வறைக்கு வெளியில் கிட்டுவின் மனைவி பார்வதி நின்றுகொண்டு விசித்து விசித்து அழுதுகொண்டிருந்தாள். நடுவில் ஒருசமயம் நாகராஜய்யர் திரும்பி அவளைப் பார்த்ததும் அவருடைய கண்களில் நீர் ததும்பியது. அவர், அன்புடன்,

"அம்மா பார்வதி! வீணாய்க் கவலைப்படாதே. அவன் பொருட்டில்லாவிட்டாலும் உன்பொருட்டாவது தெய்வம் அவனை அவசியம் காப்பாற்றுவாரென்பது நிச்சயம்.'' என்று தேறுதல் கூறவே, அப் பெண்மணி மேலும் அழவாரம்பித்தாள்.

நாகராஜய்யர் அவ்வளவு அமைதியுடனும் தைர்யத்துடனும் பேசியபோதிலும் அவர் வாஸ்தவத்தில் அநுபவித்த கவலைக்கும் பயத்திற்குமளவில்லை.

இவ்விதம் எல்லோரும் தத்தளித்துக்கொண்டிருக்கையில் அவ் வீட்டு வேலைக்காரர்களில் ஒருவன் அங்கு வந்து நாகராஜய்யரிடம் அவரைப் பார்க்கும்பொருட்டு கீழே ஒருவர் வந்திருப்பதாய்ச் சொல்லவே, அவர், வியப்புற்று,

"யாரது?'' என்று கேட்க, அவ் வேலைக்காரன், மரியாதையுடன்,

"அவருடைய பெயர் அப்துல் ரஸ்ஸாக் என்று சொல்லுகிறார்." என்று விடையளித்தான். நாகராஜய்யர்,

"யாரது? மகம்மதிய மதத்தைச் சேர்ந்த என் நண்பர்களில் இப் பெயர்கொண்டவர் ஒருவருமில்லையே. சரி; யாராயிருந்தபோதிலும் பார்ப்போம்." என்று தீர்மானித்து வந்தவரை மாடிக்கு அழைத்துவரும்படி கட்டளையிடவே, அவ் வேலைக்காரன் மறுபடியும் கீழே சென்றான்.

உடனே நாகராஜய்யருடைய சம்சாரமும் சாரதாம்பாளும் எழுந்து பக்கத்திலிருந்த ஒரு அறைக்குள் சென்றார்கள். பார்வதி கீழே சென்றாள்.

சற்றுநேரத்திற்கெல்லாம், பார்த்ததும் சுமார் 29 வயதிருக்குமென்று மதிக்கக்கூடிய ஒருவர் அவ்வறைக்குள் நுழைந்து நாகராஜய்யரை மரியாதையுடன் நமஸ்கரிக்கவே நாகராஜய்யரும் அவரை மரியாதையுடன் வரவேற்று அவருக்கு ஆசனமளித்துவிட்டு தானும் தன் நாற்காலியிலமர்ந்துகொண்டு வந்தவரை ஒருதரம் ஏறயிறங்கக் கவனித்தார். வந்தவருடைய முகத்தில் ஒரு சுறுசுறுப்பும் அபாரமான கல்வியின் சின்னங்களும் நன்கு புலப்பட்டன. அவருடைய முகம் முழுமையும் கரேலென்று அடர்ந்து வளர்ந்திருந்த ரோமம் அதன் கம்பீரத்தை அதிகப்படுத்தியதென்றே சொல்லலாம். அவர் போட்டுக்கொண்டிருந்த தங்க மூக்குக் கண்ணாடி வியக்கத்தக்கதாயிருந்தது. விலையுயர்ந்த ஒரு ஜரிகைத் தலைப்பாகையை மிகவும் நாகரீகத்துடன் அணிந்துகொண்டிருந்தார். அவர் நாகராஜய்யர் தன்னை இவ்விதம் உற்றுநோக்குவதைக் கண்டதும் புன்முறுவல் செய்தவண்ணம் வாயைத் திறக்காமல் உட்கார்ந்துகொண்டிருந்தார். நாகராஜய்யர், அவரை நன்றாய்க் கவனித்ததும்,

"ஐயா! நான் உங்களுக்கு செய்யக்கூடியதென்ன? ஆனால் முதலில் நான் ஒருவிஷயம் தெரிவித்துக்கொள்ள வேண்டும். ஒருக்கால் நான் வக்கீல் என்ற காரணத்தால் ஏதாவது வழக்கைப்பற்றி என்னிடம் பேசும்பொருட்டு



நீர் வந்திருக்கலாம். அப்படியிருக்குமானால் தயவுசெய்து நீர் என்னை மன்னிக்கவேண்டும். இப்பொழுது என் மனம்–" என்று அவர் மேலே பேசுமுன், வந்தவர்,

"அல்லாவின் கிருபையால் எனக்கு வழக்கு ஒன்றுமில்லை. இப்பொழுது வழக்குகளைப்பற்றி பேச உங்களுடைய மனம் இடந்தராதென்பது எனக்குத் தெரியும். இன்னும் நான் இப்பொழுது வந்தது தற்சமயம் நீங்கள் அநுபவித்துக்கொண்டிருக்கும் கவலை அனாவசியமென்று சொல்லும்பொருட்டேயொழிய வேறல்ல." என்றார்.

இதைக் கேட்டதும் நாகராஜய்யருக்குண்டான ஆச்சரியத்தை நம் நேயர்களே ஊகித்துக்கொள்ளலாம். அவர், திகைப்புற்று ஆவலுடன்,

"ஐயா! நீங்கள் சொல்லுவது எனக்குப் புரியவில்லை." என்றார்.

ரஸ்ஸாக் :—அப்படியா? உங்களுடைய தமயன் மகன் இக்கொலையைச் செய்யவில்லையென்பதையும் அதை வாஸ்தவத்தில் செய்தது யாரென்பதையும் என்னால் ரூபிக்கமுடியும்.

இதைக் கேட்டதும் நாகராஜய்யர் தன் செவிகளையே நம்பாதவர்போல் காணப்பட்டார். பிறகு பிரமையுடன் வந்தவரை உற்றுநோக்கியவண்ணமிருந்தார்.

நிற்க, இச் சம்பாஷணையை பக்கத்தறையில் நின்றவண்ணம் கவனித்துக்கொண்டிருந்த சாரதாம்பாளும் அவளுடைய தாயாரும் தங்களுடைய ஆச்சரியத்தின் மிகுதியால் வெளியே ஓடிவந்தார்கள். ஆனால் மறுவினாடி நாணத்துடன் மறுபடியும் உள்ளே சென்றார்கள். நாகராஜய்யர், கடைசியில் வந்தவரைப் பார்த்து,

"நீங்கள் யார்? நீங்கள் துப்பறிபவரா?" என்றார்.

ரஸ்ஸாக் :—என்னை அப்துல் ரஸ்ஸாக் என்று அழைப்பார்கள். நான் துப்பறிபவனல்ல. ஆனால் எனக்கு இப்பேர்ப்பட்ட காரியங்களில் கொஞ்சம் பிரியமுண்டு.

நாக :—சரி; இதுவரையில் நீர் இக் கேஸில் கண்டுபிடித்ததென்ன? தயவுசெய்து விபரமாய்ச் சொல்லும்.

ரஸ்லாக் :—ஸ்வாமி! என்னை தயவுசெய்து மன்னிக்கவேண்டும். இதுவரையில் நான் செய்த காரியங்களையும் வாஸ்தவத்தில் குற்றவாளி யாரென்பதையும் அவனை நான் எப்பொழுது எப்படிப் பிடிக்கப்போகிறேனென்பதையும் இப்பொழுதே என்னைச் சொல்லும்படி தாங்கள் வற்புறுத்தாமலிருக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். இன்னும் நான் இதில் இவ்வளவு தூரம் சிரத்தை எடுத்துக்கொண்டதற்குக் காரணம் நான் இதிலிருந்து எவ்வித லாபத்தையும் எதிர்பாக்கவில்லையென்பதை மிகவும் பணிவுடன் தெரிவித்துக்கொள்ளுகிறேன். ஆனால் என்னுடைய முயர்ச்சியின் பலனாய் உங்களுடைய தமயன் மகன் இவ்வாபத்திலிருந்து தப்புவானாகில் நீங்கள் எனக்கோர் காரியம் செய்வதாக இப்பொழுது வாக்களிக்கவேண்டும்.

நாகராஜய்யர் கொஞ்சநேரம் மௌனம் சாதித்தார். ஒருக்கால் அப்துல் ரஸ்லாக் சொல்லுவது முழுமையும் புளுகாயிருக்குமோவென்று அவர் முதலில் சந்தேகித்தார். ஆனால் எக் காரணத்தாலோ வரவர ரஸ்லாக் அம் மர்மத்தைக் கண்டுபிடிக்கச் சக்தி வாய்ந்தவரென்ற நம்பிக்கை அவருடைய மனதில் தோன்றியது. அதுவுமன்றி ரஸ்லாக் அவ்விதம் தன்னிடம் வந்து புளுகுவதில் அவருக்கு யாதொரு லாபமில்லையாகையாலும் இன்னும் அவரே அதிலிருந்து எவ்வித லாபத்தையும் தான் எதிர்பாக்கவில்லையென்று சொல்லுவதாலும் அவரை சந்தேகிக்க நியாயமில்லையென்று நினைத்தார். ஆனால் ரஸ்லாக் உடனே தான் அதுவரையில் செய்த காரியங்களையும் வாஸ்தவத்தில் கொலை செய்தவன் யாரென்பதையும் செல்லுவாரென்று அவர் அடக்க இயலாத ஆவலுடனிருந்தார். ஆகையால், ரஸ்லாக் அவைகளை அப்பொழுது வெளியிட இஷ்டப்படாததைக் கண்டதும் கொஞ்சம் விசனமடைந்தார். பிறகு, "சரி; நான் இவரை வற்புறுத்துவது பிசகு. ஏனென்றால்



சாதாரணமாகவே இவ்விதம் துப்பறியும் காரியங்களைச் செய்பவர்கள் குற்றவாளிகளைப் பிடிக்கும்வரையில் தாங்கள் செய்த காரியங்களைப்பற்றி பிறரை நம்பிப் பேசவேமாட்டார்கள். ஆனால் இவருடைய முயற்சியின்பலனாய் கிட்டு இவ்வாபத்திலிருந்து தப்புவானாகில் இவர் என்னிடமிருந்து எவ்வித உதவியை எதிர்பார்க்கக்கூடும்." என்று வியப்புற்று ரஸ்லாக்கை நோக்கி,

"ஐயா! உம்மை நான் சந்தேகிக்க யாதொரு நியாயமுமில்லை. என் தமயன் பிள்ளையை இவ்வாபத்திலிருந்து நீர் காப்பாற்றக்கூடுமென்று சொல்லுவதை நான் நம்புகிறேன். இன்னும் நீர் இதுவரையில் செய்த காரியங்களை இப்பொழுது என்னிடம் சொல்ல உமக்கு இஷ்டமில்லாவிட்டால் அவைகளை சொல்லும்படி நான் வற்புறுத்தப்போவதில்லை. சரி; அதிருக்கட்டும். என் தமயன் மகன் உம்மால் காப்பாற்றப்பட்டால் நான் உமக்குச் செய்யவேண்டியதென்னவென்பதைத் தயவுசெய்து சொல்லும். ஐயா! நீர் சொல்லுவது வாஸ்தவமாயிருந்து உம்முடைய முயர்ச்சியின்பலனாய் என் தமயன் மகன் இதிலிருந்து தப்புவானாகில் நீர் ஒரு குடும்பத்தையே துக்கசாகரத்திலிருந்து கரையேற்றியதுபோலாகுமென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. ஆகவே, நீர் சொல்லும் காரியத்திற்கு நான் சம்மதிப்பேனோ மாட்டேனோவென்று நீர் தயங்கவேண்டாம். வேண்டியதை உடனே சொல்லும்." என்றார். ரஸ்லாக்,

"ஸ்வாமி! நான் சொல்லப்போவதைக் கேட்டதும் ஒருக்கால் நீங்கள் ஆச்சரியப்படலாம். இருந்தபோதிலும் சொல்லுவதைக் கேளுங்கள். அப்படியே நான் அல்லாவின் அனுக்ரஹத்தால் சக்திபெற்று கிட்டு ஐயரைக் காப்பாற்றும்பக்ஷத்தில் அவர் விடுதலையடைந்து மறுபடியும் உங்களிடம் வந்ததும் அவர் இதுவரையில் செய்து வந்த சில அற்பக் குற்றங்களுக்காக அவரை வெறுத்துத் திரஸ்கரித்துவிடாமல் அவரை மன்னிக்குமாறு பிரார்த்திக்கிறேன்." என்றார்.

இதைக் கேட்டதும் நாகராஜய்யர், ரஸ்ஸாக்கின் பெருந்தன்மையையும் பணிவையும் கண்டு ஆச்சரியப்பட்டவராய்த் தனக்கு அவரிடமுள்ள மதிப்பையும் நல்ல அபிப்பிராயத்தையும் குரலில் வெளிக்காட்டி,

“ஐயா உம்முடைய பெருந்தன்மையை நான் மெச்சாமலிருக்க முடியவில்லை. ஆனால் நீர் இவ்விதம் என்னைக் கேட்டுக்கொள்ள அவசியமேயில்லை. சரி; நீர் பேசுவதிலிருந்து உமக்கு என் தமயன் மகனைத் தெரியும்போலிருக்கிறதே.” என்று வினவ, ரஸ்ஸாக், மரியாதையுடன்,

“இதுவரையில் நான் கிட்டு ஐயரைப் பலதரம் பார்த்திருக்கிறேனேயொழிய அவருடன் பேசியதில்லை. நீங்கள் எல்லோரும் கவலைப்படவேண்டாமென்று சொல்லும் பொருட்டு நான் இப்பொழுது இங்கு வந்ததும், இன்னும் நான் கிட்டு ஐயரை மன்னிக்குமாறு உங்களைக் கேட்டுக்கொண்டதும நானாகச் செய்த காரியமல்ல. நான் என்னுடைய சகோதரனென்றே மதித்துவரும் நண்பன் ஒருவன் எனக்குண்டு. உங்களுடைய தமயன் மகன் கிட்டு ஐயர் என் நண்பனுடைய சிநேகிதர். அவனுடன் வரும்பொழுதுதான் நான் கிட்டு ஐயரைப் பார்த்திருக்கிறேன். சாதாரணமாகவே இத் துப்பறியும் காரியத்தில் எனக்குக் கொஞ்சம் பிரியமுண்டென்பது என் நண்பனுக்குத் தெரியுமாகையால் அவன் இவ்விதம் கொலை நடந்திருப்பதையும் அதற்காக கிட்டு ஐயர் கைதுசெய்யப்பட்டிருப்பதையும் அறிந்ததும் என்னிடம் வந்து தன் சிநேகிதனை (கிட்டு) என்னால் முடிந்தவரையில் காப்பாற்றப் பிரயத்தனப்படும்படி வேண்டிக்கொண்டான். நல்லவேளையாய் தற்சமயம் இக் கொலையை யார் செய்தானோ அவன் ஏற்கனவே என் கண்பார்வையிலிருந்ததாலும், நடந்திருக்கும் விஷயங்களிலிருந்து அவனே இதைச் செய்திருக்கவேண்டுமென்பது எனக்கு நிச்சயமாய்த் தெரியுமாகையாலும், நான் கிட்டு ஐயரைக் கண்டிப்பாய்க் காப்பாற்றுவதாக என் நண்பனுக்கு வாக்களித்ததுமன்றி நான் அதை எப்படி செய்ய முடியுமென்பதையும் அவனுக்கு எடுத்துக்காண்பித்தேன்.



உடனே அவனுக்குண்டான ஆச்சரியத்திற்களவில்லை. கிட்டு ஐயர் கைதுசெய்யப்பட்டதும் இவ் வீட்டில் நீங்கள் எல்லோரும் தத்தளித்துக்கொண்டிருப்பீர்களென்பதை அறிந்து இதை உங்களுக்குத் தெரிவிக்கும்படி என்னைக் கேட்டுக்கொண்டதுமன்றி நான் செய்யும் காரியத்திற்கு பிரதியுபகாரமாக நீங்கள் கிட்டு ஐயரை மன்னிக்கவேண்டுமென்று என்னைக் கேட்கச் சொன்னான்.” என்று கூறவே, நாகராஜய்யர், மேலும் வியப்புற்று,

“ஐயா! நீங்கள் பேசுவதிலிருந்து உங்களுடைய நண்பன் கிட்டுவுக்கும் சிநேகிதனென்று தோன்றுகிறது. அவன் யார்?” என்று கேட்க, அப்துல் ரஸ்ஸாக் உடனே விடையளிக்காமல் தயங்கினார். அதைக் கண்ட நாகராஜய்யர்,

“ஐயா! நீர் ஏன் தயங்கவேண்டும்?” என்று வினவ, ரஸ்ஸாக்,

“ஒருக்கால் உங்களுக்கு என் நண்பனுடைய பெயரைக் காதால் கேட்கவும் இஷ்டமில்லாமலிருக்கலாம். ஏனென்றால் அவனை நீங்கள் மிகவும் வெறுக்கிறீர்களென்பது எனக்கு நன்றாய்த் தெரியும்.” என்று கூறிக்கொண்டே நாகராஜய்யருடைய முகத்தை உற்றுநோக்கினார்.

நாக:—நீர் யாரைச் சொல்லுகிறீர்? எனக்குத் தெரியவில்லையே.

ரஸ்ஸாக்:—அவனை உங்களுக்கு நன்றாய்த் தெரியும். அவன் நேற்றுவரையில் உங்களுடைய ‘பிள்ளைக்குப் பாடம் சொல்லிக்கொடுத்துவந்த நீலகண்டனேயொழிய வேறல்ல.

நீலகண்டனுடைய பெயரைக் கேட்டதும் நாகராஜய்யருடைய முகம் வெறுப்பினால் கொஞ்சம் மாறியது. ஆனால் அவர், அச்சமயம் அதைத் தான் வெளிக்காட்டிக் கொள்ளுவது பிசகென்று நினைத்து,

“ஐயா! அவனை நான் வெறுப்பதின் காரணத்தை நீர் தெரிந்துகொண்டால் என்மேல் பிசகில்லையென்று நீரே

ஒப்புக்கொள்ளுவீர்." என்று அவர் மேலே பேசுமுன், ரஸ்ஸாக்,

"ஸ்வாமி! அதைப்பற்றி நாம் இப்பொழுது பேச வேண்டாம். நேற்று இங்கு நடந்த எல்லாவற்றையும் அவன் என்னிடம் சொல்லிவிட்டான். ஆனால் அவனும் நிரபராதியென்பது நிச்சயம். உங்கள் வீட்டிலுள்ள எல்லோரும் அவன்மேல் வைத்திருந்த அளவுகடந்த பிரியத்தையும் மதிப்பையும் கண்டு எவனோ பொறாமைகொண்டு இவ்விதம் சூழ்ச்சி செய்திருக்கிறானென்பதில் சந்தேகமில்லை." என்று கூறவே, நாகராஜய்யர்,

"ஆனால், அவன் செய்த குற்றம் என்னவென்பது உமக்குத் தெரியுமோ?" என்று வினவினார்.

ரஸ்ஸாக்:—ஐயோ! அவன் யாதொரு குற்றமும் செய்யவில்லை. ஆனால், நீங்கள் அவனை இவ்விதம் வெறுத்து உம்முடைய வீட்டிலிருந்து துரத்தியதற்குக் காரணமென்னவென்பது எனக்குத் தெரியும். ஸ்வாமி! அவனுடைய நண்பராகிய கிட்டு அய்யரைக் காப்பாற்றும்பொருட்டு இவ்வளவுதூரம் சிரத்தை எடுத்துக்கொண்ட நான் அவன் நிரபராதியென்பதை ரூபிக்காமல் விடேனென்பதை நான் சொல்லவேண்டியதில்லை. சரி; அதைப்பற்றி இப்பொழுது மேலும் பேசவேண்டாம். நான் உத்திரவு வாங்கிக்கொள்ளுகிறேன். (என்று கூறியவண்ணம் எழுந்து மரியாதையுடன் நாகராஜய்யரை நமஸ்கரித்துவிட்டு மடமடவென்று போய்விட்டார்.)

* * * * *

அதே தினம் இரவு சுமார் 8 மணி இருக்கும்.

அச்சமயம் முதல் நாள் இரவு கேசவனும் பம்பாயிலிருந்துவந்த ரங்கராஜுவும் இரஹஸ்யமாய்க் கண்டு பேசிய தோப்பில் நடக்கப்போகும் சம்பவத்தை கவனிப்போம்.

ரங்கராஜு அதேயிடத்தில் கேசவனை ஆவலுடன் எதிர்பார்த்தவண்ணம் நின்றுகொண்டிருந்தான். அவன்



"ஆஹா! என்ன அநியாயம்? இந்தப் பயல் (கேசவன்) தான் பம்பாயில் செய்த கொலை போதாதென்று இங்கும் ஒரு கொலை செய்துவிட்டானே. பரிசாரகன் கிருஷ்ணனை இவனே கொலைசெய்தானென்பது நிச்சயம். ஒருக்கால் இன்று என்னைப் பார்க்க வராமலிருந்துவிடுவானோ?" என்று சிந்தித்துக்கொண்டிருக்கையில் கேசவன் என்ன செய்துகொண்டிருந்தானென்பதைக் கவனிப்போம்.

நாம் சொன்ன அத்தோப்பிலிருந்து சுமார் 100 கஜ தூரத்திலுள்ள ஒரு சாலையில் கேசவனும் அவன் முதல் நாள் இரவு கண்டு தன் விரோதி ரங்கராஜுவைக் கொலை செய்யும்பொருட்டு ஏற்பாடு செய்திருந்த முனியனும் பேசிக்கொண்டிருந்தனர்.

அன்று இரவு எங்கும் நல்ல இருள் சூழ்ந்துகொண்டிருந்ததுமன்றி ஆரவாரத்துடன் நல்ல மழையும் பெய்துகொண்டிருந்தது. இப்பொழுது அவர்களுடைய சம்பாஷணையைக் கவனிப்போம்.

முனியன்:—ஐயா! நீர் பயப்படுவதில் பிரயோஜனமில்லை. வாரும்; போய் அவனைப் பார்ப்போம்.

கேசவன்:—முனியா! அவன் (ரங்கராஜு) இன்று வந்திருப்பானென்று உனக்குத் தோன்றுகிறதோ?

முனியன்:—கண்டிப்பாய் வந்திருப்பான். பணமென்றால் பிணமும் வாயைத் திறக்கும்.

கேசவன்:—நீ சொல்வது வாஸ்தவமே. இன்னும் அவன் வராமலிருப்பதற்குக் காரணமில்லை. ஏனென்றால், பரிசாரகன் கிருஷ்ணய்யரை நான் கொலைசெய்தேனென்று அவன் எப்படிச் சந்தேகிக்கக்கூடும்? அப்படியே அவன் சந்தேகித்தாலும் என்னைப் போலீஸாரிடம் காட்டிக்கொடுக்கமாட்டானென்பது நிச்சயம். ஏனென்றால் அவன் என்னிடமிருந்து பணத்தை எதிர்பார்க்கிறான். வேண்டுமானால் 5000 ரூபாயைக் காட்டிலும் அதிகம் கேட்குமெண்ணத்துடன் வந்திருப்பான்.

முனியன் :—ஆமாம். மறந்தேவிட்டேனே. நீர் எப்படி அவ்வளவு தைர்யத்துடன் அந்தப் பாப்பானுடைய (கிருஷ்ணன்) கார்யத்தை முடித்தீர். உமக்கு அவ்வளவு தைர்யமுண்டானால் இன்று இவனை யமலோகம் அனுப்ப என்னுடைய உதவியை நீர் எதிர்பார்க்க வேண்டியதில்லையே.

கேசவன் :—முனியா! அதை ஏன் கேட்கிறாய். நேற்று நான் அடித்ததும் அவன் கீழே விழுந்து இறந்ததை நினைக்க என் உடல் இன்னும் நடுங்குகிறது. அதுவரையில் நான் இரத்தத்தைக் கண்ணால் பார்த்ததே கிடையாது. இன்னும் அந்த அடியில் அவன் இறப்பானென்று நான் நினைக்கவில்லை. அவன் என் இரஹஸ்யத்தைத் தெரிந்துகொண்டு என்னை அவ்வளவு ஏளனமாய்ப் பேசியதும், எனக்குண்டான கோப வெறியில் நான் என்ன செய்தேனென்பதை அப்பொழுது உணரவில்லை. சரி; அதைப்பற்றி எல்லாம் இப்பொழுது பேசிக்கொண்டிருப்பது பிசகு. வா; போவோம். (என்று கூறவே, இருவரும் நாம் சொன்ன தோப்பை நோக்கி துரிதமாய் நடந்தார்கள்.)

சற்றுநேரத்திற்கெல்லாம், அவ்விருவரும் அத் தோப்பிற்குள் நுழைந்ததும் இருவரும் பிரிந்து தனித்தனியாய் சென்றார்கள். முனியன் பதுங்கியவண்ணம் சென்று ரங்கராஜு தன்னைப் பார்க்கமுடியாவண்ணம் அவன் நின்றுகொண்டிருந்த இடத்திற்கு சமீபத்திலிருந்த ஒரு பெரிய மரத்தின் மறைவில் ஒளிந்து கொண்டான். இதற்குள் கேசவன், அங்கு வந்து தாழ்ந்த குரலில்,

"ரங்கராஜு! என்ன சமாசாரம்?" என்று கேட்க, ரங்கராஜு,

"எங்கே? பணம் கொண்டுவந்திருக்கிறாயா?" என்று ஆவலுடன் வினவினான். கேசவன், கலகலவென்று நகைத்துவிட்டு,



"அடே! கேசவன் எப்பேர்ப்பட்டவனென்பது இதோ வெளியாகும். இப்பொழுது நான் உன்னுடைய வியாபாரத்தின்பொருட்டு பணம் கொண்டுவரவில்லை. ஆனால் உன்னை யமலோகம் அனுப்ப டிக்கட்டு வாங்கிவந்திருக்கிறேன். முனியா!" என்று அழைக்கவே, ரங்கராஜுவின் பின்புறம் ஒளிந்துகொண்டிருந்த முனியன், தன்னிடத்திலிருந்து பாயும்பொருட்டு, தன் வலதுகாலைத் தூக்கினான். ஆனால், அச்சமயம் அவனுக்குப் பின்னால் ஒளிந்துகொண்டிருந்த ஒருவன் அவனை இறுகப் பிடித்துக்கொண்டான். அதேசமயம், பக்கத்திலிருந்த ஒரு மரத்தின் மறைவிலிருந்து, மற்றொருவன் குபீரென்று பாய்ந்து நம் கேசவனைப் பிடித்துக்கொண்டான். இதற்குள் சமீபத்திலிருந்த சில மரங்களின் கிளைகளிலிருந்து சுமார் 15 பேர் பொத்துப்பொத்தென்று தரையில் குதித்தனர். மறுநிமிஷம் தற்காலத்தில் எல்லோரும் உபயோகிக்கும் சிறு மின்சார விளக்குகளின் வெளிச்சம் அத் தோப்பு முழுமையும் பாவியது.

அன்று பிற்பகல் வக்கீல் நாகராஜய்யருக்கு கிட்டுவைத் தான் காப்பாற்றுவதாக வாக்களித்த அப்துல் ரஸ்ஸாக் கேசவனையும் அவ்வூர் போலீஸ் இன்ஸ்க்பக்டர் ஜம்புநாதய்யர் முனியனையும் பிடித்துக்கொண்டிருந்தனர். மரக் கிளைகளிலிருந்து குதித்த போலீஸ் சேவகர்கள் அவர்களைச் சூழ்ந்துகொண்டிருந்தனர். அச்சமயம் கேசவனும் மாறு வேஷமணிந்துகொண்டிருந்தானாகையால் அப்துல் ரஸ்ஸாக், போலீஸ் இன்ஸ்பெக்டரை நோக்கி,

"ஜம்புநாதய்யர்வாள்! இவன் யாரென்பது உமக்குத் தெரியுமோ? இதுவரையில் நான் இதை உம்மிடம் சொல்லாததற்காக என்னை தயவுசெய்து மன்னிக்கவேண்டும். இவனுடைய வாஸ்தவப் பெயர் கேசவன். ஆனால் இதுவரையில் இவனை எல்லோரும் யாரென்று நினைத்துவந்தார்களென்பதை இதோ பாரும்." என்று சொல்லிக்கொண்டே கேசவனுடைய முகத்திலிருந்த தாடி மீசை தலைப்

188798



பாகை இவைகளையெல்லாம் எடுக்கவே, நம் ஜம்புநாதய்யர் வாயைத் திறக்கவும் சக்தியற்று சிலைபோல் நின்றார்.

அதற்குக் காரணம் அச்சமயம் ரஸ்ஸாக் பிடித்துக் கொண்டிருந்தது வக்கீல் நாகராஜய்யருடைய பக்கத்து வீட்டிலிருந்தவரும் கொலை செய்யப்பட்ட கிருஷ்ணனுடைய யஜமானருமாகிய பாலகிருஷ்ண செட்டியாரேயொழிய வேறல்ல.

இங்கு கேசவன் யாரென்பதையும், பாலகிருஷ்ண செட்டியார் யாரென்பதையும், அதுவரையில் எல்லோரும் கேசவனை வாஸ்தவமான பாலகிருஷ்ண செட்டியாரென்று எப்படி நம்பிவந்தனரென்பதையும், கேசவன் பரிசாரகன் கிருஷ்ணனை ஏன் கொலை செய்தானென்பதையும், நம் நேயர்களுக்குத் தெளிவாய்ப் புரியும்பொருட்டு நாமே விபரமாய்க் கூறிவிடுவது நலம்.

தற்சமயம் நம் கதை நடக்குமிடமாகிய சுந்தரபுரியில் நாம் சொல்லும் சமயத்திற்கு சுமார் 30 வருஷகாலத்திற்கு முன் அவ்வூரில் எல்லோரும் மகா பணக்காரனென்று அபிப்பிராயப்பட்டுவந்த வாசுதேவ செட்டியாரென்று ஒருவருண்டு. அச்சமயம் வாசுதேவ செட்டியாருக்கு சுமார் 30 வயதிருக்கும். அதற்குள் அவருக்கு விவாஹம் முடிந்து கிட்டத்தட்ட 10 வருஷகாலமிருக்கும். அச்சமயம் அவருடைய மனைவிக்கு 25 வயது இருக்கலாம். மகா உத்தமியாகிய அவளுக்கு வாசுதேவசெட்டியாரால் பிறந்த குழந்தையே பாலகிருஷ்ணன். அச்சமயம் அவனுக்கு 2 வயதிருக்கும். நிற்க, வாசுதேவ செட்டியார் அச்சமயம் ஒரு வருஷகாலமாய் தன் வீட்டிற்குப் பக்கத்தில் வசித்துவந்த மிகவும் எளிய குலத்திலுதித்தவளும் ஆனால் அபாரமான ரூபலாவண்யமுடையவளுமான ஒரு மங்கையின்மீது மோகங்கொண்டு அவளுடைய கட்டை யுடைந்து இரகஸ்யமாய் அவளை சுகித்துவந்ததின் பலனாய் அவரால் அப்பெண்மணிக்கும் ஒரு ஆண் குழந்தை பிறந்தது. அவனே தற்சமயம் கைதுசெய்யப்பட்டிருக்கும் கேசவன் கேசவனை அவனுடைய தாயார் இரகஸ்யமாய்ப் பிரஸவித்ததும் அக் குழந்

188798



தை ஒரு தாசிக்கு விற்கப்பட்டது. வரவர வாசுதே செட்டியாருக்கு கேசவனுடைய தாயார்மீது மோகமு தன் சொந்த மனைவியின்மீது வெறுப்பும் அதிகரித்து கொண்டேவந்தது. அச்சமயம் கேசவனுடைய தாயாருக்கு 18 வயதிருக்கும். அவள் எப்படியாகிலும் வாசுதேவ செட்டியாரை விவாஹம் செய்துகொள்ளத் தீர்மானித்திருந்தாளாகையால் செட்டியார் தன் வலையில் தப்ப வகையின்றி மாட்டிக்கொண்டுவிட்டாரென்பதை அறிந்ததும் தன் அபேக்ஷையை வெளியிட்டாள். அதுவரையில் செட்டியாருக்கு அவளை விவாஹம் செய்துகொள்ளக்கூடுமென்ற எண்ணம் தோன்றவில்லையாகையால் அவர் வியப்புற்று அது எப்படி சாத்தியமென்று கேட்க ராக்ஷஸியென்றே சொல்லவேண்டிய அப் பெண்மணி அதற்கு மார்க்கத்தையும் காண்பித்தாள். அதன் பலனாய் அதிலிருந்து மூன்று மாதகாலத்திற்குள் செட்டியாரின் சொந்த மனைவி பிறர் சந்தேகிக்க வகையின்றி விஷத்தினால் கொல்லப்பட்டாள். அவள் இறந்த ஒரு வருஷத்திற்குள் அச் சண்டாளி செட்டியாருடைய இரண்டாவது மனைவியானாள். அவள் தன் வீட்டிற்குள் நுழைந்ததும் செட்டியார் தன் முதல் மனைவியால் தனக்கு ஒரு குழந்தையுண்டென்பதையே மறந்து பாலகிருஷ்ணனை சிறிதும் கவனிக்காமலிருந்துவந்தார். அவ் வீட்டிலிருந்துவந்த ஒரு வேலைக்காரனே அக் குழந்தையின்மீது இரக்கங்கொண்டு அதை வளர்த்துவந்தானென்று சொல்லலாம். பாலகிருஷ்ணனுடைய 12வது வயதில் அவனுடைய வலது கால் கட்டை விரலில் ஒரு சிறங்கு கிளம்பி அதன் பலனாய் அவன் அவ் விரலையே இழக்க நேரிட்டது. அச்சமயம் நாம் சொன்ன அவ் வேலைக்காரன் பாலகிருஷ்ணன்பொருட்டு எடுத்துக்கொண்ட சிரமத்தைக் கண்டவர்களில் ஆச்சரியப்படாதவர்கள் ஒருவருமில்லை. சில தினங்களுக்குமுன் ஒரு இரவு முருகன் என்ற ஒரு கிழவனை அவன் குடியிருந்த வீட்டின் சொந்தக்காரர் சிறிதும் இரக்கமின்றி அவ் வீட்டிலிருந்து துரத்தியதையும் அச்சமயம் நம் கதாநாயகனாகிய நீலகண்டன்

நீலகண்டன்.
சென்னை-600 008

பாகை

...மையுரு தோன்றி அ... உதவிபுரிந்ததையும் ...மநேயர்கள் மறந்திருக்கமாட்டார்களென்று நம்புகிறோம். கோ...சுதேவ செட்டியார் வீட்டில் வேலைக்காரனாயிருந்தவனும் டி...பாலகிருஷ்ணனை நாம் சொன்னவிதம் வளர்த்துவந்தவனும் ய-அதே முருகனேயொழிய வேறல்ல. பாலகிருஷ்ணனை... 16வது வயதில் அவன் தன்னை அதுவரையில் வளர்த்துவந்த முருகனிடமிருந்து தன் தந்தை தன் தாயாரை விஷம் வைத்துக் கொன்றதை அறிந்துகொள்ளவே அவனுக்கு வாசுதேவ செட்டியாரிடம் ஏற்பட்ட வெறுப்பும் கோபமும் அளவற்றது. அதுவுமன்றி அதற்குள் தன் தந்தையின் நீச சுபாவத்தையும் அவர் தன் இரண்டாவது மனைவியின் மயக்கத்தில் தன்னை ஒரு பிள்ளையென்றும் மதிக்காமல் கண்டபடி திட்டி ஹிம்ஸிப்பதையும் வரவர உணர்ந்துவந்தானாகையால் வாசுதேவ செட்டியார் தன் தாயாரை விஷம் வைத்துக் கொன்றானென்பதை அறிந்ததும் இனி அவருடைய முகாலோபமும் வேண்டாமென்று அவ்வூரை விட்டு ஓடியவன் கிட்டத்தட்ட 12 வருஷகாலம்வரையில் போனவிடம் தெரியவில்லை.

நிற்க வரவர வாசுதேவ செட்டியாருடைய இரண்டாவது மனைவி நாம் இங்கு எடுத்தெழுத மனம் துணியாத பல அக்கிரமங்களைச் செய்ய ஆரம்பிக்கவே செட்டியார் தான் அதுவரையில் செய்த குற்றங்களை உணர்ந்து தன் புதல்வன் பாலகிருஷ்ணனைப் பார்க்க மிகவும் ஏக்கமுற்றார். ஆனால் அவர் எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் அவன் போனவிடம் தெரியாததாலும் அதுவரையில் தான் செய்த குற்றங்களை நினைத்துத் தன்னைத் தானே வெறுத்தும் எல்லாம்போக தன்னுடைய இரண்டாவது மனைவி தன் கண் எதிரிலேயே செய்யும் அக்கிரமங்களைக் கண்டு மனமொடிந்தும் சுமார் 3 வருஷகாலத்திற்குமுன் சிக்கில் விழுந்துவிட்டார். வரவர பலஹீனமும் அவருடைய மனதிலிருந்த துக்கமும் அதிகரித்துக்கொண்டே வந்தன. ஆனால் அவர் அவ்விதம் சீக்கில் விழுந்த 3 மாதகாலத்திற்குள் அவருடைய இரண்டாவது மனைவி பலவித துர் வியாதிகளின்